கர்வபங்கம்

மொழிபெயர்ப்பு

ஆர். ஷண்முகசுந்தரம்

புதுமலர் நிலையம்

புதுமலர் நிலையப் புதுப் புத்தகங்கள்

1. சந்திர நாத் (சரத்சந்திரர்)
2. ரமா ,,
3. அற்புத ரசம் (டி. கே. சி.)
4. நந்தா விளக்கு (ஆர். ஷண்முகசுந்தரம்)
5. பூவும் பிஞ்சும் [நாவல்] ,,
6. கன்னிப்பெண் (ஆர். திருஞானசம்பந்தம்)

வரப்போகும் நூல்கள்:

பொருளாதாரத் துறையிலே அதி அற்புதமான தமிழ்ப் புத்தகம்! உலகப் பொருளாதார நிபுணர் எனப் போற்றப்படும் தமிழ் அறிஞர் எழுதியது. மற்றும், சிந்தனையைக் கிளறும், சிறந்த நூல்கள் வெகு சீக்கிரம் வெளிவருகின்றன.

புது மலர் 10

கர்வ பங்கம்

எழுதியது :
சரத்சந்திர சட்டர்ஜி

மொழிபெயர்த்தது :
ஆர். ஷண்முகசுந்தரம்

புதுமலர் நிலையம்
கோயமுத்தூர்

 [விலை அணா 12

ஐந்து புதுமலர் வெளியீடுகள்

1.	அற்புத ரசம்	0- 6-0
2.	ஜமீந்தாரிணி	0-12-0
3.	கர்வ பங்கம்	0-12-0
4.	நந்தா விளக்கு	2- 0-0
5.	பூவும் பிஞ்சும்	2- 8-0

விற்பனை உரிமையாளர்:
கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட்
துறையூர்-திருச்சி ஜில்லா

இந்தக் "கர்வ பங்கம்" என்னும் நவீனத்தைத் தொடர் கதையாகக் 'கல்கி'யில் வெளியிட்டு உதவியதோடு புத்தகமாகவும் வெளியிட அனுமதி அளித்துள்ள ஆசிரியர் கல்கி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி.

புதுமலர் நிலையம்
கோவை
15-2-44

ஆர். ஷண்முகசுந்தரம்

முதற்பதிப்பு : பிப்ரவரி 1944

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி.டி., சென்னை.

கர்வ பங்கம்

அத்தியாயம் 1

மாலை மயங்கிய பிறகு இந்துமதி தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு, கணவனுடைய அறைக்குள் நுழைந்து, "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்றாள்.

நரேந்திரன் மாதப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் வாய் திறந்து ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் மனைவியின முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, பத்திரிகையை அவளிடம் கொடுத்தான்.

இந்துமதி திறந்திருந்த பக்கத்தைப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தாள். "அடடா! உங்கள் கவிதை வெளிவந்திருக்கிறதே! சும்மா உட்கார்ந்து இருப்பதற்கு இது ஒரு நல்ல சம்பளமில்லாத வேலை கிடைத்துவிட்டது! பத்திரிகையின் பெயர் என்ன? 'சரஸ்வதி'யா? ஏன் 'விசால பாரத்'தில் வெளியிடவில்லை?" என்றாள்.

நரேந்திரனுடைய சாந்தமான முகம் வேதனையால் வாடியது.

இந்து மறுபடியும் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

"'விசால பாரத்தி'லிருந்து திருப்பி அனுப்பி விட்டார்களா?"

"அங்கு அனுப்பவே இல்லையே?"

"ஒருதரம் அங்கு ஏன் அனுப்பிப் பார்க்கக் கூடாது? 'விசால பாரத்' 'சரஸ்வதி'யைப் போல அல்ல. அதில் உயர்தரமான விஷயங்கள் மட்டுமே பிரசுரமாகும். நான் கண்ட பத்திரிகைகளை எல்லாம் படிப்பதில்லை."

இந்து சிறிது சிரித்துவிட்டு மறுபடியும், "சரி, நீங்கள் எழுதின கவிதையை நீங்களே பேஷாகப் படித்து அனுபவித்துக்கொண்டிருக்கலாம்? இன்று சனிக்கிழமை: நான் மன்னியைக் கூட்டிக்கொண்டு சினிமாவிற்குப் போகிறேன். கமலா தூங்கிவிட்டாள். காவியத்திலேயே மூழ்கி விடாமல் அவளையும் சிறிது பார்த்துக்கொள்ளுங்கள். நான் போகிறேன்" என்றாள். நரேந்திரன் பத்திரிகையை மூடி மேஜைக்குள் வைத்துவிட்டு, "போய் வா" என்றான்.

இந்து போகத் தொடங்கினாள். ஆனால் அதற்குள் அவன் ஆழ்ந்த மூச்சு விடுவது அவள் காதில் விழுந்தது. உடனே அவள் திரும்பி நின்று, "நான் என்னவாவது செய்ய விரும்பினால் போதும்; அவ்வளவுதான். இப்படியே பெருமூச்சு விட்டுக் கெடுக்கிறீர்கள்! அவ்வளவு கஷ்டமாயிருந்தால் வாய் திறந்து சொல்லி விடுவதுதானே? நான் அப்பாவுக்காவது கடிதம் எழுதி ஏதாவது வழிதேடிக் கொள்கிறேன்" என்றாள்.

நரேந்திரன் கொஞ்சநேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். ஏதாவது சொல்லுவான்

போலிருந்தது. ஆனால் ஒன்றும் பேசவில்லை. சும்மா தலை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தான்.

நரேந்திரனுடைய ஒன்று விட்ட சகோதரி விமலா, இந்துமதியின் தோழி. அவளுடைய வீடும் தெரு முனையில்தான் இருந்தது. இந்து வண்டியிலேறிக்கொண்டு விமலாவின் வீட்டுக்குப் போனாள். வாசலில் வண்டியை நிறுத்திவிட்டு, இந்து வீட்டிற்குள் நுழைந்தாள். மிகுந்த கோபத்துடன், "இதென்ன மன்னி! இன்னும் சேலைகூட மாற்றவில்லையே! உனக்கு விஷயம் தெரியாதா?" என்றாள் இந்து.

விமலா புன் சிரிப்புடன், "தெரியும், ஆனால் கொஞ்நேரம் ஆகும், இந்து! அவர் இப்போதுதான் வெளியே உலாவப் போனார். அவர் வருவதற்கு முன் போக முடியாது" என்றாள்.

இந்து மிகக் கோபமடைந்தாள். கைகளைப் பிசைந்துகொண்டு, "மகாராஜாவின் உத்தரவு இன்றும் உனக்குக் கிடைக்கவில்லைபோ லிருக்கிறது!" என்றாள்.

விமலாவின் முகம் புன்சிரிப்பினால் பிரகாசித்தது. "இல்லை, இந்த அடிமை இன்னும் அனுமதியே கேட்கவில்லை. ஆனால் கேட்டவுடன் அனுமதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை உண்டு" என்றாள்.

இந்துவுக்கு இன்னும் அதிக கோபம் உண்டாயிற்று. "ஏன் இன்னும் கேட்கவில்லை? நான் ரொம்ப நேரத்திற்கு முன்னாலேயே சொல்லி அனுப்பினேனே!" என்றாள்.

"அப்போது கேட்கத் தைரியம் வரவில்லை.

ஆபீஸிலிருந்து வந்ததும், 'தலை வலிக்கிறது' என்று சொன்னார். சரி, காபி குடித்துக் கொஞ்சம் களைப்பாறட்டும், அப்புறம் கேட்கலாம் என்றிருந்தேன்: இன்னும் நேரம் இருக்கிறது. கொஞ்சம் உட்காரேன். அவர் வந்து விடுவார்."

"இதைக் கேட்க எவ்வளவு வெட்கமா யிருக்கிறது தெரியுமா? நானாக இருந்தால் வெட்கத்தால் செத்தே போய்விடுவேன். சரி, அதிருக்கட்டும், யாராவது வேலைக்காரர்களிடம் சொல்லிவிட்டுப் போக முடியாதா?" என்றாள் இந்துமதி.

விமலா பயத்துடன், "ஐயையோ! வீட்டை விட்டே துறத்தி விடுவார்களே! அப்புறம் இந்த ஜன்மத்தில் என் முகத்திலேகூட முழிக்க மாட்டார்கள்" என்றாள்.

இந்து ஆச்சரியத்தால் திடுக்கட்டு, "துறத்தி விடுவார்களா! எந்தச் சட்டப்படி? எந்த அதிகாரத்தினால்? சொல்லு பார்ப்போம்!" என்று கேட்டாள்.

விமலா, மிகவும், சதாரணமாகவே, "இதில் என்ன தடை இருக்கிறது? அவர் எஜமானர், நான் வேலைக்காரி. அவர் என்னை வெளியே போகச் சொன்னால் யார் தடுக்க முடியும்?" என்றாள்.

"சர்க்கார் தடுக்கும்! சட்டம் தடுக்கும்! சரி: இதெல்லாம் தொலையட்டும். உன்னை நீயே 'வேலைக்காரி' என்று சொல்லிக்கொள்வதற்கு வெட்கமா யில்லையா விமலா? மனைவி என்றால் விலைக்கு வாங்கி வந்த வஸ்துவா, இவ்வளவு அற்பமாக எண்ணிக் கொள்வதற்கு?"

இந்துவினுடைய கோபத்தைப் பார்க்க விமலா

விற்கு வேடிக்கையாக இருந்தது. "உன்னுடைய மன்னி ஒரு மூடப்பெண். 'கணவனுடைய வேலைக்காரி' என்று சொல்லிக்கொள்வதைக் கௌரவமாகக் கருதுகிறாள். நீ இவ்வளவு பேசுகிறாயே, வீட்டைவிட்டு வரும்போது அண்ணாவுடைய உத்தரவில்லாமல்தான் வந்தாயா? சொல்லு பார்ப்போம்!" என்றாள் விமலா.

"உத்தரவா? ஏன், எதற்காக? அவர்கள் எங்கேயாவது போகும்போது நம்முடைய உத்தரவைக் கேட்கிறார்களா?" என்றாள் இந்து.

சிறிதுநேரம் அவள் பேசாமலிருந்து விட்டு, "ஆனால், எனக்குக் கிடைத்ததுபோல எல்லா ஸ்திரீகளுக்கும் குணவானான கணவன் கிடைக்கமாட்டார் என்பதை ஒத்துக்கொள்கிறேன். 'எனது விருப்பத்திற்கு மாறாக ஒருபோதும் அவர் தடையாக இருந்ததில்லை. அப்படி இல்லாமலிருந்து, அவர் ஒரு முட்டாளாக இருந்திருந்தால்கூட, நான் என் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். நான் அவருடைய துணைவி. சகதர்மிணி என்று சொல்லிக்கொள்வேனே தவிர 'விலைக்கு வாங்கிய அடிமை' என்று உன்னைப்போல நான் ஒருகாலும் நினைத்துக்கொண்டிருக்க மாட்டேன்! அப்படித்தான் நமது தேசத்துப் பெண்கள் ஆண்களின் காலடியில் விழுந்து சரணாகதி யடைந்து தங்களை மிக அற்பமாக எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். ஆண்களின் விளையாட்டுப் பொம்மைகளாகி விட்டார்கள். உங்களுடைய மரியாதையை, சுயமதிப்பை நீங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாவிட்டால், பின் யார்தான் உங்களை மதிப்பார்கள்? ஒருவரும்

மதிக்கமாட்டார்கள். என்னுடைய கணவர் ரொம்ப நல்லவர்தான். இருந்தாலும் அவர் ஒரு பெரிய பிரபு, நான் அவர் மனைவியானதினால் அவருக்கு அடங்கியவள் என்ற முறையில் நடந்துகொள்வதில்லை. இந்தப் பெண் உடலிலும்தான் கடவுள் இருக்கிறார். இதை நானும் மறப்பதில்லை. அவரையும் மறக்க விடுவதில்லை!" என்றாள்.

விமலா இதைக்கேட்டு ஆழ்ந்த மூச்சுவிட்டாள். ஆனால் அதில் வெட்கமோ, வருத்தமோ, துளிக்கூடத் தெரியவில்லை. "எப்படிச் சுயமரியாதையைச் சம்பாதிப்பதென்பது எனக்குத் தெரியாது. இந்து! எனது ஆத்மாவை அவரது பாதத்தில் சமர்ப்பிக்கத்தான் எனக்குத் தெரியும். அதோ அவரும் வந்துவிட்டார். கொஞ்சம் உட்கார்ந்திரு, நான் போய் அனுமதி வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புன்முறுவலுடன் எழுந்து சென்றாள் விமலா.

இந்து அவளுடைய புன்னகையைக் கவனித்தாள். கோபத்தால் அவள் உள்ளம் தணலாகக் காய்ந்தது.

சினிமாவிலிருந்து திரும்பும்போது இந்து, "மன்னி, உனக்கு அனுமதி கிடைத்திருக்காவிட்டால்; வந்திருக்கமாட்டாயல்லவா?" என்று கேட்டாள்.

விமலா எதையோ யோசித்துக்கொண்டு "ஆமாம்" என்றாள்.

"உன்னை அடிக்கடி வந்து கூட்டிப்போய் விடுகிறேனே. அதனால் உன் கணவர் கோபம் அடைந்தாலும் அடைந்திருப்பார் என்று நினைக்கிறேன்."

"அப்படி யிருந்தால், எனக்கு வருவதற்குப் பைத்தியமா? ஆனால் நீ இப்படி வருவதால் அண்ணா எங்கே என்மேல் கோபித்துக்கொள்வானே என்று தான் எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றாள் விமலா.

இந்து கர்வத்துடன், "உனது அண்ணா அப் பேர்ப்பட்டவர் அல்ல, முதலாவது அவர் தன் அதிகாரத்திற்கு அப்பால் அடி எடுத்து வைக்கமாட்டார்! இரண்டாவது, அவர் என் காரியத்தில் கோபம் அடைய வேண்டுமென்று கனவில்கூடக் கருதமாட்டார்" என்றாள்.

விமலா சிறிதுநேரம் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். பிறகு மெதுவாக, "அண்ணா உன்மீது இவ்வளவு அன்பு செலுத்துகிறார். ஆனால் நீ ஒரு வேளை...." என்று நிறுத்தினாள் விமலா. இப்போது இந்துமதிக்குச் சிரிப்பு வரவில்லை. "அவருடைய அன்பை நான் மறுக்கவில்லை. ஆனால் என் விஷயத்தில் உனக்கு எப்படிச் சந்தேகம் தோன்றியது?" என்று கேட்டாள் இந்து.

"எப்படி என்று தெரியவில்லை. ஆனால் என்னவோ........'

"ஏன் உண்டாகிறது தெரியுமா, மன்னி? உங்களுடையதைப்போல பாதபூஜையிலிருந்து கிடைக்கிற அன்பல்ல. அதனால்தான். எனது சுயமரியாதையை இழந்து அந்த அன்பை அடையும்படி கடவுள் எனக்கு அருள் புரியாதிருக்கட்டும். எனது சுதந்திர உணர்ச்சியை அழிக்கும் அந்த அன்பை நான் வெறுக்கிறேன்" என்றாள்.

விமலா உள்ளுக்குள்ளே நடுங்கினாள்.

ஒரு நிமிஷம் பேசாமலிருந்துவிட்டு மறுபடியும், "நீ ஏன் பேசமாட்டேனென்கிறாய் மன்னி? என்ன யோசிக்கிறாய்?" என்றாள்.

"ஒன்றும் இல்லை. அண்ணா உன்னிடம் இவ்விதமே எப்போதும் அன்புடனிருக்கட்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள். மனைவிக்குப் புருஷனுடைய அன்பைவிட உயர்ந்தது உலகத்தில் வேறு ஒன்றுமே கிடையாது, அம்மா! இந்த அண்ட பகிரண்டமும் அதைவிடப் பெரிதல்ல!"

கணநேரம் பேசாமலிருந்து விட்டு மறுபடி விமலா, "உனது சுயமரியாதை என்ன? சுதந்திர உணர்ச்சி என்ன என்பதெல்லாம் எனக்கென்ன தெரியும்? ஆனால் நான் என்னவோ சகலத்தையும் அவரது காலடியிலேயே சமர்ப்பித்து விட்டேன். எனது என்று என்னிடத்தில் ஒன்றும் இல்லை. எனது ஆசை என்று தனியாக ஒன்றும் இல்லை. எல்லாம் அவரது ஆசையே..........."

"ராம, ராம! பேசாதிரு, பேசாதிரு!" என்றாள் இந்து.

விமலா திடுக்கிட்டுப் பேசாமலிருந்தாள்! இந்து மிகுந்த வெறுப்புடன், "நமது தேசத்துப் பெண்களே மண் பொம்மைகள்தான். உயிர் கிடையாது, ஆத்மா கிடையாது—ஒன்றுமே கிடையாது! சரி, நான் ஒன்று கேட்கிறேன். இவ்வளவு செய்தும் நீ கண்ட பலன் என்ன? என்னைவிட அதிகமாக அன்பை அடைந்து விட்டாயா? மன்னி, அன்பை அளப்பதற்குக் கருவி கிடையாது. அப்படி இருந்தால் அளந்தாவது பார்க்கலாம்! சரி, இது தெரி

யுமா உனக்கு? பெண்கள் ஏன் இப்படிப் புருஷர்களிடம் பிச்சை எடுக்க வேண்டும்? புருஷர்கள் வாயைக்கூடத் திறப்பதில்லையே? எவ்வளவு சாந்தத்துடனிருக்கிறார்கள்! இதை எல்லாம் நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது. யாரைப் புருஷர்கள் பொருட்படுத்துவதில்லையோ, அந்தப் பெண்மணிகளும் ஜீவன்கள்தான், அவர்களுக்கும் அலட்சியம் செய்யத் தெரியும். எந்தப் பெண்ணும் சுயமரியாதையை இழந்து காதலைப் பெறமாட்டாள். இதென்ன? முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரிக்கிறாயே!" என்றாள் இந்து.

விமலா சிரிப்பை அடக்கிக்கொண்டு, "இல்லையே!" என்றாள்.

"இல்லையா? இன்னும் உன் முகத்திலிருந்து சிரிப்பு மறையவில்லையே?

விமலா சிரித்தாள். "உன் பேச்சைக் கேட்கச் சிரிப்பாக வருகிறது. உனக்கு அன்பு ரொம்பக் கிடைத்துப் போச்சு. அதனால்தான் இத்தனை பேச்சுப் பேசுகிறாய்!" என்றாள் விமலா.

கோபத்துடன், "கிடைக்காதிருந்தால்?" என்றாள் இந்துமதி.

"வெளிக் கிளம்பாது"

"தப்பு, சுத்தத் தப்பு. எல்லோரும் உன்னைப் போல இல்லை. எல்லோரும் பிச்சை எடுத்துக் கொண்டு திரிவதில்லை. சுயமரியாதையை உணர்ந்த பெண்கள் எத்தனையோ பேர் உலகத்தில் இருக்கிறார்கள்."

இப்போது விமலாவின் முகத்தில் படர்ந்திருந்த

சிரிப்பும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. "அது தெரியும்" என்றாள்.

"தெரிந்திருந்தால் இம்மாதிரி பேசியிருக்க மாட்டாய். எப்படியானாலும் சரி, அன்புப் பிச்சை எடுக்காத பெண்களும் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள். அவர்கள் எல்லாம் தங்கள் பலத்தினால் அன்பை அடைகிறார்கள்."

விமலா மிகுந்த துக்கத்துடன், "சரி, வீடு வந்து விட்டோம். இங்கு இறங்குகிறாயா, இல்லையா?"

"இல்லை. நான் வீட்டிற்குப் போகிறேன். வண்டிக்காரா, அந்த வீதிக்கு ஓட்டு.

"அண்ணாவை நான் விசாரித்ததாகச் சொல்லு."

"சரி, சொல்லுகிறேன்."

அத்தியாயம் 2

"இப்போது போகக் கூடாது. குடும்பச் செலவிற்குக் கொஞ்சம் ரூபாய் கொடுக்கவேண்டும்" என்ற இந்துவின் பிரார்த்தனையைக் கேட்டு நரேந்திரன் ஆச்சரியமடைந்தான். "இதற்குள் இருநூறு ரூபாய் செலவழிந்து விட்டதா?" என்று கேட்டான்.

"செலவழியாமல், நான் பொய் சொல்கிறேனா? அல்லது எங்கேயாவது ஒளித்து வைத்துக் கொண்டேனா?"

நரேந்திரனது, முகத்திலும், கண்களிலும் பீதி பரவியது. "பணம் எங்கே யிருக்கிறது? எப்படிச் சேர்ப்பது?" என்றான்.

அவனது முகத்தில் தோன்றிய பீதியை இந்து பார்க்கவில்லை; வெறும் பொய்யைத்தான் பார்த்தாள்!

"நம்பிக்கை இல்லாவிட்டால் இப்போதே ஒரு கணக்குப் புஸ்தகம் வாங்கிக் கொடுத்து விடுங்கள்! அதில் எழுதி வைத்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் ஒரு காரியம் செய்யுங்கள்; செலவிடும் பணத்தை எல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இதனால் உங்களுக்கும் கவலை இருக்காது. எனக்கும் இந்தக் கெட்ட பெயர் உண்டாகாது!" என்று கூறிவிட்டு அவனை எரித்துவிடுபவள் போலப் பார்த்தாள் இந்து.

நரேந்திரன் மெதுவாக, "அவநம்பிக்கைப் படவில்லை. இருந்தாலும்..........."

“இருந்தாலும் என்ன? நம்பிக்கையில்லை என்பது தானே? சரி, நான் போய் முடிந்தவரையி லும் கணக்கு எழுதிக் கொண்டு வருகிறேன்.... ஆஹா! நம்ம குடும்பம்தான் எவ்வளவு லக்ஷண மாக இருக்கிறது!” என்று இந்துமதி கூறிவிட்டு மிகுந்த கோபத்துடன் அறையை விட்டுச்சென்றாள்.

ஆனால் அதே சமயத்தில் அவள் திரும்பிவந்து, “இருந்தாலும் என்ன? எதற்காக நான் கணக்கு எழுதுகிறேன்? நான் என்ன பொய் சொல் கிறேனா? எனது தங்கையின் கல்யாணத்தின் போது சேலைத் துணி ஐம்பது ரூபாய், கமலாவிற் குத் துணிகள் மொத்தத்தில் பன்னிரண்டு ரூபாய், அன்று சினிமாவிற்குப் போனதில் பத்துப் பன் னிரண்டு ரூபாய்; சரி, கணக்குக் கூட்டிப் பாருங் கள்; எத்தனை மிஞ்சுகிறது? அன்றைக்கிருந்து இந்தப் பத்துப் பதினைந்து நாளைக்கும் குடும்பச் செலவு எவ்வளவு ஆகிவிட்டது. உங்களுக்கு எவ் வளவு ஆகிவிட்டது? உங்களுக்கு இவ்வளவு கோபம் வருவதெதற்கு? எங்க அண்ணா குடும்பத்திற்கு மாதத்திற்கு எழு நூறு, எண்ணூறு ரூபாய் இல்லா மல் போதாது; உண்மையைச் சொல்கிறேன். இம் மாதிரி செய்தால் இந்த வீட்டில் அரை நாழிகைகூட என்னால் இருக்க முடியாது. வாய் திறந்து உண் மையைச் சொல்லிவிட்டால் நான் பெண்ணைக் கூட்டிக்கொண்டு அண்ணாவிடமாவது சென்று விடு வேன். எனக்கும் நிம்மதியா யிருக்கும். நீங்களும் பிழைத்துப் போவீர்கள்!” என்றாள் கோபத்துடன்.

நரேந்திரன் வெகுநேரம் வரையிலும் குனிந்த படியே உட்கார்ந்திருந்துவிட்டு, “இப்போது ஒன்

றும் செய்யமுடியாது. சாயந்திரத்திற்குள் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்" என்ருன்.

"இதன் அர்த்தம் என்ன? ஏற்பாடு செய்யா விட்டால் பட்டினி கிடப்பதா? கேளுங்கள். நாளையே நான் மிதினப்பூர் போகப் போகிறேன். நீங்களும் ஒரு காரியம் செய்யுங்கள். இந்தத் தரகு வியாபாரத்தை விட்டொழித்துவிட்டு, அண்ணவிடம் சொல்லி ஏதாவது வேலையில் சேர்ந்து கொள்ளுங்கள். இதனல் உங்களுக்குப் பிற்காலத்துக்கு ரொம்ப நல்லது. உங்களால் எடுபடாத காரியத்தில் இறங்கிக் கொண்டு உங்களையும் கெடுத்துக்கொண்டு, வீணக என்னையும் கெடுக்காதீர்கள்" என்ருள் இந்து,

நரேந்திரன் ஒன்றும் பேசவில்லை. இந்து இன்னும் ஏதோ சொல்ல விரும்பினள். ஆனல் அதற்குள் வேலைக்காரன் வந்து ஷம்பு பாபு அவனைப் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னன். அடுத்த கணமே ஷம்பு பாபு உள்ளே வரும் காலடி ஓசை கேட்டது. இந்து அடுத்த அறைக்குள் சென்றுவிட்டாள்.

ஷம்பு பாபு பெரிய லேவாதேவிக்காரர். நரேந்திரனுடைய தந்தை போதிய கடனை வைத்துவிட்டு இறந்துபோனர். நரேந்திரனிடம் கடனுக்காக ஷம்பு பாபு அடிக்கடி வந்துகொண்டிருந்தார். இன்றும் அவர் இதற்குத்தான் வந்திருக்கிருர். மனுஷர் நல்ல மிருதுபாஷி! எவ்வளவு வெட்கங்கெட்டவனக இருந்தாலும் அவர் இரண்டாவது தடவை வந்து பணம் கேட்பதற்கு முன்பே தலையை அடமானம் வைத்தாவது பணத்தைச் செலுத்திவிடுவான்!

ஷம்பு பாபு வந்துபோன பிறகு இந்து மறுபடியும் நரேந்திரனிடம் வந்தாள். "இவர் யார்?" என்று கேட்டாள்.

"ஷம்பு பாபு."

"அது சரி........"

"இவருக்கு நான் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் வந்தார்."

"அதை நான் தெரிந்துகொண்டேன். கடன் எதற்காக வாங்கியது?"

நரேந்திரன் இக்கேள்விக்குச் சற்றுச் சுற்றி வளைத்துக்கொண்டு தான் பதில் சொன்னான்.

"அப்பா திடீரென இறந்துவிட்டார். அதனாலே........" என்று அவன் ஆரம்பித்தான்.

இந்து மிகக் கடுமையாக, "உங்கள் அப்பா என்ன உலகம் பூராவும் கடனை வாங்கி வைத்துவிட்டுப் போனாரா? இதை யார் தீர்ப்பது? நீங்களா? எப்படித் தீர்ப்பீர்கள்? நல்லது சொல்லுங்கள்!" என்றாள்.

இத்தனை கேள்விக்கும் ஒரே மூச்சில் பதில் அளிக்க முடியாதுதான். ஆனால் இந்துவும் அதற்காகக் காத்திருக்கவில்லை.

"உங்கள் அப்பாதான் எதிர்பாராது திடீரென இறந்துவிட்டார். நீங்கள் ஒன்றும் அப்படித் திடீரெனக் கலியாணம் செய்துகொள்ளவில்லையே? இவைகளை எல்லாம் என் அப்பாவிடம் நீங்கள் ஏன் தெரிவித்திருக்கவில்லை? என்னிடமும் ஏன் ஒளிக்க வேண்டும்? நீங்கள் ஒரு பெரிய தர்மவான் என்று ஜனங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்! இவைகள் எல்லாம் உங்கள் தர்ம சாஸ்திரத்தில் சொல்லப்

படவில்லையா ?" என்று கேட்டுவிட்டு, கணவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்ருள் இந்து.

அட தெய்வமே! இவ்வளவு கூர்மையான பாணங்கள் எவன்மேல் எய்யப்பட்டதோ அவன் ஒரு நிராயுதபாணி. வேறு ஒரு வழியுமில்லாதவன். கடவுள் அவனை இவ்விதம்தான் பூலோகத்திற்கு அனுப்பியிருக்கிருர்! யாரிடத்திலேனும் சரி, பழி வாங்கவேண்டுமென்ற உணர்ச்சி சிறிது மில்லாத வன்; அவனிடம் ஒரே ஒரு சக்திதான் உண்டு. அதுதான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள் ளும் சக்தி! இந்த மாதிரி பேச்சுக்கள் அவன் இத யத்தில் கடும் வேதனையை உண்டாக்கி, சிறிது நேரத்தில் அவிந்துபோய்விடும்.

ஆனல் இன்றைக்கோ சற்று நேரத்திற்கு முன்புதான் ஷம்பு பாபு மிகக் கடுமையாக நடந்து கொண்டார். அதற்குள் இந்து தனது கூரிய சொல்லம்புகளினல் துளைத்தாள். இவைகள் எல் லாம் சேர்ந்து அவனைக்கூட இரண்டொரு கடுமை யான வார்த்தைகளைக் கூறும்படி தூண்டிவிட் டன! இருந்தாலும் கோபம் கொண்டவன்போல நடிக்கத்தான் முடிந்தது! அவன் வாய் திறந்து வேறு ஒன்றும் சொல்லவில்லை. "அப்பா விஷய மாக இப்படிப் பேசுவது சரியா ?" என்றுமட்டும் தான் கேட்டான்.

"இல்லை; சரி இல்லைதான். ஆனல் நான் உங்களிடம் சரி, தப்பு, கேட்டுத் தெரிந்துகொள்ள வரவில்லை! உங்கள் குடும்ப நிலையைப்பற்றி என் அப்பாவிடம் நீங்கள் ஏன் பூரா விவரமும் சொல்ல வில்லை ?" என்ருள்.

"நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை, இந்து! என் அப்பாவும், உனது தந்தையும் பால்ய சிநேகிதர்கள். அவருக்கே எல்லாம் தெரியும்."

"எல்லாம் தெரிந்துதான் அப்பா என்னை இங்கே தள்ளிவிட்டார் என்று சொல்லுங்கள்!"

சொல்ல முடியாத துக்கத்தால் நரேந்திரன் திடுக்கிட்டுப்போய் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு கடைசியாகத் தலை குனிந்து கொண்டான். மனைவியின் இந்த நடத்தை உண்மைதானா அல்லது வேண்டுமென்று கோபத்தில் இப்படி நடந்துகொண்டாளா என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

இங்கு, சில பழைய விஷயங்களைச் சொல்லியாகவேண்டும். ஒரு காலத்தில் இரண்டு குடும்பங்களும் அருகருகே வசித்துவந்தன. அந்த நாளிலேயே இருவருக்கும் விவாகம் நிச்சயமாகி இருந்தது. ஆனால் திடீரென ஒரு நாள் இந்துவின் தகப்பனார் தம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு பெண்ணை வயது வருகிறவரையிலும் கலியாணம் செய்யாமல் படிக்கவைக்கவேண்டும் என்று தீர்மானித்தார். இதனால் இவர்கள் விவாக விஷயம் தடைப்பட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு பெண்ணின் பதினெட்டாம் வயதில் மறுபடியும் பேச்சு எழுந்தபோது இந்துவின் தகப்பனார் கல்கத்தா வந்தார். ஆனால் நரேந்திரனுடைய தந்தை இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டார். அப்போது இந்துவின் பெற்றோர்கள் நரேந்திரனது நிலைமையைப்பற்றி நன்கு அறிந்துதானிருந்தார்கள். அவனுக்குப் பெண் கொடுக்கவே சம்மதம்

இல்லை. ஆனாலும் பெண்ணின் வயது, படித்த பெண்ணின் தணிக்க முடியாத காதல், இவைகளை எல்லாம் உத்தேசித்துக் கடைசியாகச் சம்மதித்தார்.

இவைகளை எல்லாம் இந்து இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டாளா? எந்த மாய மோகத்தினால் தன்னைத்தான் ஏமாற்றிக்கொண்டாளோ, அதுதான் இன்று அவளைச் சதா இரவும் பகலும் வருத்திக்கொண்டிருக்கிறது. நரேந்திரனுக்கு இவைகள் ஒன்றும் தெரியாததால் அமைதியாகத் தலை குனிந்து உட்கார்ந்துகொண்டிருந்தான்.

தன் கணவனுடைய சாந்தம் நிறைந்த முகத்தை ஒரு கணம் பார்த்துவிட்டு இந்து வேறு ஒன்றும் பேசாமல் அறையை விட்டுச் சென்றுவிட்டாள். அவள் பேசாமலே போய்விட்டாள். இதற்கு முன் பல தடவை இம்மாதிரியே போயிருக்கிறாள். ஆனால் இன்றோ தன் இதயத்திலிருந்த வேதனை அனைத்தையும் இந்து வேரோடு பறித்து எடுத்துக்கொண்டுபோய்விட்டது போன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாகியது. ஒரு தரம் தலையை உயர்த்தி மனைவி போவதைப் பார்த்தான். அவள் தனது பார்வையிலிருந்து மறைந்ததும் ஒரு மூச்சு — ஒரு ஆழ்ந்த மூச்சு வாங்கிவிட்டான். பிறகு அங்கேயே சிலைபோல உட்கார்ந்திருந்தான். திடீரென்று இன்றுதான் அவன் மனதிலே, ‘எல்லாம் பொய். வெறும் ஏமாற்றம்; வீடு வாசல், பெண்டு, பிள்ளை, நட்பு, காதல் எல்லாம் வீண் மாயை’ என்று தோன்றியது. அவனது வாழ்க்கையே இன்று ஒரு நொடியில் கானல் நீர்போல அவனுக்குக் காட்சி யளித்தது!

அத்தியாயம் 3

"அண்ணா?"

"யார் விமலாவா? வா, அம்மா, உட்கார்!" என்று கூறிவிட்டு நரேந்திரன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். அவனுடைய முகத்தில் தோன்றிய கவலைக் குறிகளை அவனால் மறைக்க முடியவில்லை.

"வெகு நாளாக உன்னைப் பார்க்க முடியவில்லையே. சௌக்கியந்தானே விமலா?"

விமலாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அவள் மெதுவாகக் கட்டிலருகில் வந்து, "அண்ணா! உனக்கு உடம்பு குணமில்லை என்பதை எனக்கு ஏன் சொல்லி அனுப்பக் கூடாது?" என்று கேட்டாள்.

"நோய் ஒன்றும் அவ்வளவு கடுமையாக இல்லை, அம்மா! அந்த மார் வலி தான் கொஞ்சம் ...."

விமலா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "கொஞ்சமா? எழுந்து உட்காரவே முடியவில்லையே! டாக்டர் என்ன சொல்கிறார்?" என்றாள்.

"டாக்டரா? டாக்டர் எதற்கு? தானாகவே இது சௌக்கியமாகிவிடும்."

"ஐயையோ! டாக்டர்கூட வருவதில்லையா? எத்தனை நாள் ஆச்சு?"

நரேந்திரன் சிறிது சிரித்துவிட்டு, "எத்தனை

நாளா? அன்றிலிருந்துதான். ஆறு, ஏழு நாள் ஆகிறது.''

''ஏழு நாள்! அப்போ, மன்னி எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத்தான் போயிருக்கிறாள்!''

''இல்லை, இல்லை! பார்த்துவிட்டுப் போகவில்லை. உண்மையாகவே எனக்கு உடம்பு சரியில்லை என்பது அவளுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. அவள் போகிறபோது எழுந்து வெளியே உட்கார்ந்துகொண்டிருந்தேன். இல்லை, இல்லை. எவ்வளவு கோபமாகத்தானிருந்தாலும் உங்களால் இப்படிப் போய்விட முடியுமா, அம்மா?''

''மன்னி ஏன் கோபித்துக்கொண்டாள்?''

''இல்லை, கோபம் அல்ல. துக்கம், கஷ்டம், இவைகள்தான்! இங்கே எவ்வளவு ஸௌகரியக் குறைவு என்பதுதான் உனக்கே தெரியுமே. அவளுக்கு இவைகளைச் சகித்துக்கொண்டு இருக்க முடியாது. அதோடு உடம்பும் அவளுக்கு ரொம்ப மோசமாக இருந்தது. இல்லாவிட்டால் நீங்கள் கோபத்தினாலே நோயாளியைக்கூட கவனியாமல் இருந்துவிடுவீர்களா?''

விமலா, கண்ணீரை அடக்கிக்கொண்டு மிகவும் மெதுவாக, ''ஏன் முடியாது? இருந்துவிடுகிறார்களே. எங்களால் முடியாதது ஒன்றுமேயில்லை. நீ படுக்கையில் விழுகிற வரையிலும் எங்களுக்குத் தெரியவே இல்லை பாரு! போலா! வண்டி கொண்டுவாடா!'' என்றாள்.

''கொண்டுவரச் சொல்லி அனுப்பியிருக்கிறேன், அம்மா!''

''இப்போதே போகவேண்டுமா? இன்னும்

சாயங்காலம்கூட ஆகவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு" என்றான் நரேந்திரன்.

"இல்லை, அண்ணா. இருட்டிப்போய்விட்டால் பனி வந்துவிடும். மெதுவாக வந்து வண்டியில் உட்காரு."

"என்னை அழைத்துப் போகிறாயா? சுத்தப் பைத்தியம்! எனக்கு என்ன வந்துவிட்டது? இவ்வளவு தடபுடல் படுத்துகிறாயே? இம்மாதிரி எப்போதும் வருவது வழக்கம். உடனே சௌக்யமாகி விடும்."

"அப்படியே ஆகட்டும். ஆனால் உன்னை இழந்துவிட்டால் எனக்கு வேறு அண்ணாவே கிடையாது. இதோ, வண்டியும் வந்துவிட்டது. இந்தக் கம்பளியை நன்றாகப் போர்த்துக்கொள். இல்லை அண்ணா, இந்தச் சமயத்தில் நீ என் பார்வையில் இல்லாவிட்டால் எனக்குத் துளிக்கூட நிம்மதி உண்டாகாது."

"நீ கூட்டிப்போக விரும்புவாய் என்று தெரிந்திருந்தால் தகவலே கொடுத்திருக்கமாட்டேன்."

விமலா அண்ணாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "உனக்குத் தெரிந்தது உன்னிடத்திலேயே இருக்கட்டும், அண்ணா! இப்படிச் சொல்ல உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ! இம்மாதிரி நிலைமையில் உன்னைத் தனியாக விட்டுப் போக முடியுமா? ரொம்ப நன்றாகச் சொன்னாய்!" என்றாள்.

"சரி வா, போவோம்."

"அண்ணா!"

"ஏன்?"

"இன்று இரவு மன்னிக்கு ஒரு தந்தி கொடுக்கிறேன். நாளைக் காலையிலேயே புறப்பட்டு வரட்டும்."

நரேந்திரன் கவலை அடைந்தான். "வேண்டாம் வேண்டாம். அதற்கு அவசியமே இல்லை" என்றான்.

"ஏன் இல்லை? மிதுனபூர் அவ்வளவு தூரமான ஊர் அல்ல. ஒருதரம் வந்துவிட்டுப் போகட்டும்."

"வேண்டாம் விமலா, வேண்டாம். உண்மையிலேயே அவளுக்கு உடம்பு சரியில்லை. கொஞ்ச நாளைக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும்."

பிறகு சிறிது பொறுத்து, "விமலா! நான் உனதருகிலிருந்து சௌக்கிய மடையாவிட்டால், பிறகு நான் ஒருகாலும் சௌக்கியமடைய மாட்டேன். ஏனம்மா நான் வருவது ககன பாபுக்குத் தெரியுமா?" என்றான்.

"அவர் இன்னும் ஆபீஸிலிருந்தே வரவில்லை."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? நீ பயப்பட வேண்டியதில்லை அண்ணா. அவருக்குப் பெரிய இரண்டு கண்களிருக்கின்றன. நாம் போனதும் கண்டுகொள்வார்."

நரேந்திரன் படுக்கையில் படுத்துக்கொண்டு, "விமலா, அப்படியானால் நான் வருவதற்கில்லையே" என்றான்.

விமலா ஆச்சரியத்துடன் "ஏன்?" என்றாள்.

"ககன பாபுவின் சம்மதமின்றி—"

"இப்படிச் செய்தாயானால் நான் மண்டையை உடைத்துக்கொண்டு செத்துப் போவேன். ஒரே வீட்டில் இரண்டுபட்ட அபிப்பிராயம் இருக்குமா? நீ ஏன் என்னைக் கேலி செய்கிறாய்?"

''கேலியா செய்கிறேன்!''

''இரண்டுபட்ட அபிப்பிராயம் இருக்காது என்று உறுதியாக நம்புகிருயா விமலா?''

விமலா அவசியமான துணிகளை எல்லாம் எடுத்துத் தயாராக வைத்திருந்தாள். வெட்கத்தால் தலையை அசைத்து, "இருக்கவே இருக்காது" என்ருள்.

"அண்ணு இன்று வலி அவ்வளவு இல்லையல்லவா?"

''கொஞ்சம்கூடக் கிடையாது. இந்த எட்டு நாளாக உங்களுக்கு எத்தனை கஷ்டத்தைக் கொடுத்தேன்! சரி, இன்று நான் போகிறேன், அம்மா!''

யாருக்கு அண்ணு சிரமப்பட்டேன்? சரி, அண்ணு! இந்தப் பத்துப் பதினைந்து நாளாக மன்னியிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லையே!''

"ஏன்? வராமல் என்ன? போய்ச் சேர்ந்ததும் ஒரு கடிதம் வந்தது. நேற்றுக்கூட ஒரு கடிதம் வந்தது. ஆனல் நான்தான் பதில் எழுதவில்லை.''

விமலா முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருந்தாள்.

நரேந்திரன், "அங்கு போனதிலிருந்து ஏதாவது ஒன்றுபோக ஒன்று உடம்புக்கு வந்துகொண்டிருக்கிறதாம். நேற்று ஜுரமாம். அப்படியிருந்தும் கடிதம் எழுதி யிருக்கிருள்!''

''இதனுல்தான் இன்று அங்கு பணம் அனுப்பி வைத்தாயா?"

நரேந்திரன் சிறிது வெட்கமடைந்தான். ''அவள் கையில் ஒன்றும் கிடையாது. அங்கே ஒரு திருவிழா வருகிறதாம். அது முடிந்ததும் வருவதாக

எழுதி யிருக்கிருள். உனக்குக் கடிதம் வரவில்லை போலிருக்கிறது.”

“எனக்குக்கூட நேற்று ஒரு கடிதம் வந்திருக்கிறது.”

“வந்திருக்கிறதா? சரி, அதற்குப் பதில் எழுதும் போது....”

“நீ பயப்படாதே அண்ணு! உனது உடம்பைப் பற்றி எழுதமாட்டேன். இதை எல்லாம் எழுதி நேரத்தை வீணுக்கமாட்டேன்” என்று கூறிவிட்டு விமலா அறையிலிருந்து வெளியில் சென்றுவிட்டாள்.

சாயங்காலம் நரேந்திரன் மௌனமாக உட்கார்ந்துகொண்டு திறந்திருந்த ஜன்னல் வழியாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது விமலா அங்குவந்து, “தனியாக உட்கார்ந்துகொண்டு என்ன யோசிக்கிருய் அண்ணு?” என்ருள்.

நரேந்திரன் அவள்புறம் திரும்பி, “ஒன்றும் யோசிக்கவில்லை அம்மா! இவ்விதமே எப்போதும் நீ சுகமாக வாழவேண்டும் என்று மனதிற்குள்ளாக ஆசீர்வதிக்கிறேன்” என்ருன்.

விமலா அருகில் வந்து அவனது பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

“சரி, மத்தியானம் நீ ஏன் ரொம்பக் கோபத்தோடு போனுய்?” என்று கேட்டான் நரேந்திரன்.

“நான் அநியாயத்தைச் சகிக்கமாட்டேன். நீ ஏன் இவ்வளவு—” என்று சொல்லி நிறுத்தினுள் விமலா.

"இவ்வளவு என்ன, சொல்லம்மா? இந்துவைக் கவனித்தாயா? என்றால் அவள் என்ன சுகத்தைக் கண்டாள்?"

"சுகப்படுவதற்கும் சக்தி வேண்டும் அண்ணா! அவள் அடைந்த சுகத்தைப் போல வேறு எத்தனை பெண்கள் அடைந்திருக்கிறார்கள்? சுகத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால்........" அதைப் பேசி முடிப்பதற்குள்ளாகவே விமலா வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டாள். நரேந்திரன் மிகுந்த அன்புடன் அவளையே பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, "விமலா, வெட்கமடையாதே அம்மா! உண்மையைச் சொல். நீ எப்போதும் சண்டை யிட்டதே இல்லையா?" என்றான்.

"அவர் ஒன்றும் சொல்லமாட்டார்."

நரேந்திரன் புன்முறுவலுடன், "ககனபாபு உன்னிடம் ஒன்றுமே சொன்னதில்லையா?" என்றான்.

விமலா தனது அழகிய முகத்தை உயர்த்தி, "உங்களோடு சண்டையிட்டு யார் ஜெயிக்க முடியும்? கடைசியில் கையைக் காலைப் பிடித்து—" என்று சொல்லிக்கொண்டே வந்தவள் எதையோ பார்த்துவிட்டு "ஐயோ, அங்கு யார் நிற்பது?" என்றாள்.

"ஏன் நிறுத்தி விட்டாய்? சொல்ல வந்ததை முழுதும் சொல்லு! சண்டையிட்டுக் கையைக் காலைப் பிடிப்பது யார்? விஷயத்தைப் பூராவும் சொல்லிவிடு" என்று சொல்லிக்கொண்டே ககனபாபு உள்ளே வந்தார். "போங்கள், ஒட்டுக் கேட்

கிற இந்தப் புண்ணிய புருஷருக்கு நான் பதில் சொல்ல மாட்டேன்" என்று கோபம் வந்தவள் போல கூறிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டாள் விமலா. நரேந்திரன் எழுந்து தலையணையின் உதவியால் நன்றாக உட்கார்ந்தான்.

ககனபாபு, "இப்போது உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று கேட்டார்.

"குணமாகிவிட்டது. எனக்குப் போக அனுமதி கொடுங்கள்."

"போவதற்கா? பயப்படாதே யப்பா! இன்னும் நாலைந்து நாளைக்கு இருந்து பார். உனது தங்கை வீட்டில் யார் எத்தனை நாளிருந்தாலும் அத்தனை வருஷம் ஆயுள் விருத்தியாகும், தெரியுமா?"

"எனக்கு இத்தனை நாளாகத் தெரியாது. ஆனால் பூரணமாக இதை நம்புகிறேன்."

ககனபாபு, "உண்மையான விஷயத்தை நம்புவதற்கென்ன? வாஸ்தவத்திலேயே நரேந்திர பாபு, உலகத்திலே இம்மாதிரி ரத்தினங்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். பாக்கியவான்! 'பாக்கியம் பலதி' அந்த ஸ்லோகம் என்ன? இல்லாவிட்டால் என்னைப் போன்ற அபாக்கியவானுக்கு இப்படிப்பட்ட ரத்தினம் கிடைக்குமா? இது கற்பனைக்கும் எட்டாத விஷயம்........வேண்டாமப்பா வேண்டாம். இன்னும் நாலைந்துநாள் இங்கேயே இரு. இந்த மாதிரி வீட்டைவிட்டு சொர்க்கத்திற்குப் போனால்கூட உனக்கு ஆறுதல் உண்டாகாது. இதை நான் சொல்லிவிடுகிறேன்."

விமலா எங்கும் போய்விடவில்லை. பக்கத்து

அறையில்தான் நின்றுகொண் டிருந்தாள். தன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, அவர்களிருவரும் உட்கார்ந்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அந்த இருளில்கூட நரேந்திரனது முகம் துக்கத்தால் வெம்பி வெதும்புவது தெரிந்தது.

அத்தியாயம் 4

பத்துப் பதினைந்து நாளைக்கப்புறம் மத்தியான வண்டியில் இந்துமதி தன் பெண்ணுடன், மிதுனப்பூரிலிருந்து புருஷன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். மனைவியையும், மகளையும் கண்டு அந் நிலையில்கூட நரேந்திரன் சிறிது சந்தோஷமடைந் தான். ஆவலுடன் தன் மகளை மார்போடு அணைத் துக்கொண்டான்.

"சௌக்கியமா, இந்து?" என்று கேட்டான் நரேந்திரன்,

"சௌக்கியம்தான், ஏன்?"

"உனக்கு ஜுரம் என்று எழுதி யிருந்ததைப் பார்க்கக் கவலையாக இருந்தது. உடம்புக்கு ஒன்றும் இல்லையே."

"குணமாகாவிட்டால், நீங்கள் என்ன டாக் டரையா கூப்பிடப்போகிறீர்கள்?"

நரேந்திரனது முகம் வாடியது. "டாக்டரைக் கூப்பிட வில்லையா?" என்றான்.

"கூப்பிட்டு என்ன செய்வது? ஐம்பது ரூபாயை அனுப்பி விட்டு, 'எப்படி இருக்கிறது உடம்பு? ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்!' என்று கடிதத்தின்மேல் கடிதம் எழுதித் தள்ளி விட்டீர்கள்! நான் என்ன சின்னக் குழந்தையா? இந்த ஐம்பது ரூபாய்க் காசு என் அண்ணாவால் கொடுக்க முடியாதா? அவர்களுக்கு முன்னால் இந்தப் பணத்தை அனுப்பித்து என்னை ஏன்

அவமானப் படுத்த வேண்டும்? அன்றைக்கு வீட்டிற்குள் எங்கு பார்த்தாலும் எல்லோரும் இதைப் பற்றியேதான் பேசிச் சிரித்தார்கள்.''

நரேந்திரன் இன்னும் அதிகத் துக்கமடைந்தான்.

''அதிகமாகக் கிடைக்க வில்லை'' என்றான் ரொம்ப மெதுவாக.

''பணத்தை அனுப்பாமலே இதை ஏன் எழுதி விடக் கூடாது? அப்பா! இனிமேல் பழையபடி 'இல்லை, இல்லை, கொடு, கொடு' என்ற தொல்லை தான் தினமும். இத்தனை நாளாகச் சௌக்கிய மாக இருந்தேன். உண்மையிலேயே பணக்கார வீட்டுப் பெண்ணை ஏழை வீட்டுக்குக் கொடுப்பதைப் போன்ற பாபம் உலகத்திலேயே வேறு ஒன்றும் கிடையாது!'' என்று கூறி, புருஷனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு அப்பால் சென்றாள்.

ஒரு மாதத்திற்கு அப்புறம் புருஷனும் மனைவியும் முதல் முதலாக இவ்வாறு பேசிக் கொண்டார்கள்.

இந்து தன் அறைக்குள் சென்று பார்த்தாள். உடனே மிகுந்த ஆச்சரியமடைந்தாள். வீட்டின் மற்ற பாகங்களைப் போலவே இங்கும் சாமான்களெல்லாம் நன்கு சீராக வைக்கப்பட்டிருந்தன.

''சாமான்களெல்லாம் ரொம்ப நன்றாக வைத்திருக்கிறதே!''

''நீங்கள் வருவீர்களென்று தான்'' என்று புதிய வேலைக்காரி சொன்னாள்.

''நான் வருவேனென்றா?''

''ஆம், அம்மா! பாபுஜிதான் சொன்னார்.

உங்களுக்கு அழுக்கும் கிழுக்குமாயிருப்பது பிடிக்காது என்று. அதனால் இந்த மூன்று நாளாக....''

இந்து மனதிற்குள்ளாகவே மிகுந்த கர்வமடைந்தாள். "குப்பைக் கூளத்தை யாரால்தான் சகிக்க முடியும்? முற்றங்கூட நன்றா யிருக்கிறதே.......''

"ஆம், அம்மா! ஆளை விட்டுச் சுத்தம் செய்யச் சொன்னார்.''

"போ, ராமனைப் கூட்டி வா. கடைக்குப் போய்ப் பழங்கள் வாங்கி வரட்டும்.''

"பழம் இருக்கிறது. பாபுஜி அதி காலையிலேயே கடைக்குப் போய் எல்லாம் வாங்கி வந்து விட்டார்.''

"இளநீர் இருக்கிறதா?''

"இல்லாமலென்ன? இதோ எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு வேலைக்காரி சென்றாள். இந்துவின் முகத்திலிருந்த கவலைக் குறிமறைந்து விட்டது. ஆனால் சிறிது நேரத்திற்கு முன் கண்ட தன் கணவனது கவலை தோய்ந்த முகம்தான் அவள் இதயத்தை வாட்டியது.

சிறிது இளைப்பாறினதிற்கப்புறம் அவள் மிகுந்த சந்தோஷத்துடன் தன் கணவனது அறைக்குள் நுழைந்தாள். நரேந்திரன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். "என்ன விஷயத்தை எழுதுவதில் அப்படி மூழ்கிப் போய் விட்டீர்கள்? கவிதையா?'' என்று கேட்டாள்.

நரேந்திரன் தலையை உயர்த்தி "இல்லை'' என்றான்.

"பின் என்ன?''

"ஒன்றுமில்லை" என்று கூறி, கடிதத்தை மூடி வைத்து விட்டான்.

இந்துவின் பிரசன்ன வதனம் சஞ்சலமடைந்தது. "ஒன்றுமில்லையே, பின் ஏன், இவ்வளவு பாடுபட்டுக் குனிந்து உட்கார்ந்து எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? அண்ணா வசம் வேலை காலியாக எத்தனையோ இடம் இருப்பதாகக் கேள்விப் பட்டேன்" என்று கூறி விட்டு அவனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தப் பேச்சு அவன் மனதைப் புண்படுத்தும் என்பதை அவள் நன்கறிவாள். ஆனால் இன்றோ அவன் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லா திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள்.

நரேந்திரன், சாந்தமாக, "வேலைக்கு அங்கு எத்தனையோ பேர்கள் இருப்பார்கள்" என்றான்.

இந்த எதிர் பாராத பதிலினால் இந்து மிகக் கோபமடைந்தாள். ஒரு கணம் பேசாமலிருந்து விட்டு, "அது எனக்குத் தெரியும். ஆனால் அங்கே தானா இருக்கிறார்கள்? இங்கு இல்லையா, என்ன? நல்ல வார்த்தை சொன்னால்கூட உங்களுக்குக் கெட்டதாகப் படுகிறது. வீட்டின் மூலையில் உட்கார்ந்துகொண்டு கவிதை எழுதுவதற்கு உங்களுக்கு வெட்கமாயில்லை!" என்று சொல்லி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் கிளம்பினாள்.

இது இரண்டாவது சந்திப்பு.

"அடடா! யார் இது, மன்னியா! எப்போது வந்தாய்?" என்று கேட்டாள் விமலா.

"நேற்று மத்தியானம்" என்று பதில் சொன்னாள் இந்து.

"நேற்று மத்தியானமா? அதுதான் இவ்வளவு சீக்கிரமாகத் தரிசன மளிக்க வந்தாயா? வேண்டாம் மன்னி. இத்தனை அன்பையும் ஒரே அடியாக வர்ஷிக்காதே!"

"கடிதம் எழுதினதற்குப் பதில் கூடப் போட வில்லை! ஒருத்தி எத்தனை நாளைக்குத்தான் அன்பை வர்ஷித்துக் கொண்டிருக்க முடியும்?"

விமலா ஆச்சரியத்துடன், "கடிதம் கிடைக்க வில்லையா?" என்றாள்.

"அது கிடைத்தும் கிடைக்காதது போலத் தான். நாலு பக்கத்திற்குப் பதில் நாலுவரிதானே?"

"அப்போது துளிக்கூட நேரமிருக்கவில்லை, மன்னி. இங்கே அண்ணாவிற்குக் கொஞ்சம் சௌக்கியம் ஆனதும், அங்கு எங்கள் புதுக் குடித் தனக்காரருக்கு 'இப்பவோ. பிறகோ' என்று ஆகிவிட்டது."

இந்துவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தாள்.

விமலா ஒன்றையும் கவனிக்காமல், "அந்தச் செவ்வாய்க்கிழமை என்றைக்கும் எனக்கு ஞாபகத்திலிருக்கும். ஏழு நாள் கழித்துத் தகவல் தெரிந்த பிறகு நான் அண்ணாவைப் போய்க் கூட்டிக் கொண்டு வந்தேன். இரண்டு நாளைக்குப் பிறகு வலி ரொம்ப அதிகரித்து விட்டது. நாங்களெல்லாம் பயந்தே போய் விட்டோம். அங்கு அம்பிகா பாபுவுக்கும் ஜுரம் அதிகரித்து விட்டது. என்ன சொல்லட்டும் மன்னி, ஒத்தடம் கொடுத்துக் கொடுத்து வீட்டிலிருப்பவர்களுக்கெல்லாம் கை வெந்து போயிற்று! இரவு பகல் ஒருவராவது

அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போகவில்லை. அம்பிகா பாபுவின் மனைவியை சதி சாவித்திரி என்று தான் சொல்லுவேன். சின்னப் பெண் தான். இருந்தாலும் எவ்வளவு புத்திசாலித்தனம், எப்படி எல்லாம் காரியங்கள் செய்கிறாள் தெரியுமா? அவளுடைய புண்ணியத்தால் அவர் இப்போது தப்பித்துக் கொண்டார். பின் வேறு மருந்து ஒன்றும்.......''

"அம்பிகா பாபு யார்?"

"தெரியாது! காடாலுக்குப் பக்கம் எங்கேயோ இருப்பவர்கள். வைத்தியத்திற்காக இங்கு வந்திருக்கிறார்கள். நம் பக்கத்து வீட்டில்தான் குடியிருக்கிறார்கள்........''

இந்து இடைமறித்து, "உங்க அண்ணாவிற்கு உடம்பிற்கு என்ன?" என்றாள்.

"என்னவா! அன்று இராத்திரி நிஜமாகவே நான் பயந்து போய் விட்டேன். அந்தப் பக்கம் மருந்துப் புட்டிகள் குவிந்து கிடக்கிறதைப் பார்க்கலையா? மும்மூன்று டாக்டர்கள்! என் மன்னி. அண்ணா உனக்குக் கடிதத்தில் இவைகள் ஒன்றையும்பற்றி எழுதவில்லையா?"

இந்து எதையோ யோசித்துக் கொண்டு, "இல்லை" என்றாள்.

"இங்கு வந்துதான் கேட்டிருப்பாய்?"

"ஆம்" என்றாள் இந்து.

"நான் உனக்கு முதல் நாளே தந்தி கொடுக்க வேண்டுமென்று நினைத்தேன். இரண்டு, மூன்று மணிக்குள் வந்து விடலாம் அல்லவா? ஆனால் அண்ணா வேண்டாமென்று சொல்லிவிட்டான்.''

பிறகு சிரித்துக்கொண்டு, "அவரை நீ என்ன செய்து வைத்திருக்கிறாய் என்பது உனக்குத்தான் தெரியும். ஜுரமா யிருக்கிறபோது பயந்துகொள் ளப் போகிறாள் என்று நினைத்து உனக்குத் தகவலே கொடுக்காமலிருந்து விட்டார். கடவுள் கிருபையால் அவருக்குக் குணமாகிவிட்டது, இல்லாவிட்டால்—"

"இல்லாவிட்டால் என்ன விமலா? நோய் குணமடைந்த பிறகும் ஒன்றும் வேண்டியிருக்க வில்லை. நோய் குணமடையாதிருந்தாலும் வேண் டித்தா னிருக்காது" என்று கூறிவிட்டு இந்து எழுந்து போய் மருந்துப் புட்டியில் ஒட்டியிருந்த லேபிளைப் படிக்க ஆரம்பித்தாள்.

எப்போதுமே நடைபெறாதது இன்று என்ன புதிதாக நடந்தது? இன்று திடீரென அவள் கண் களிலிருந்து கண்ணீர் வழிந்தது! "அவர் எனக்கு ஒன்றும் ஆக வேண்டியதில்லையா? இவ்வளவு பெரிய நோயில் விழுந்தும் விஷயமே தெரிவிக்க வில்லையே! அப்படி நான்தான் என்ன சங்கடமான நிலைமையில் இருந்தேன். நோய் விஷயத்தைத் தெரிவிக்கக் கூடாது என்பதற்கு? குணமடைந்த பிறகுகூட அவர் கடிதத்தில் எத்தனையோ விஷயங் களைப் பற்றி எழுதி இருந்தாரே! தன் சொந்த விஷயத்தைமட்டும் எழுத மறந்துவிட்டாரா? நன்றா யிருக்கிறது! இங்கே நான் வந்துகூட மூன்று நாளா கிறதே? இன்னும்கூட ஞாபகம் வரவில்லையா?" என்று இவ்வித மெல்லாம் தோன்றியது.

"மன்னி, மருந்துப் புட்டிகளை இப்பொழுது எடுத் துப் பார்த்து என்ன பிரயோஜனம்? நீ என்ன பரீட்சித்துப் பார்த்தாலும் அவைகள் ஒன்றும் உன்

ளிடம் பொய் சாட்சி சொல்லாது! வா, உனக்கு டீ தயாராக இருக்கிறது. எழுந்திரு" என்று கூறி விட்டு, விமலா மௌனமாக இந்து அருகில் சென்று நின்றாள்.

டீ குடித்தான பிறகு விமலா, எதை உத்தேசித்துச் சொன்னாளோ தெரியவில்லை. "அது எவ்வளவு வேடிக்கையாக இருந்தது தெரியுமா, மன்னி? ஒரே வீட்டில் இரண்டு நோயாளிகள், ஆனால் இரண்டு பேருக்கும், வெவ்வேறு நிலைமை! நீ எங்கு பயந்து விடுவாயோ என்று அண்ணா இறக்கும் வரையில்கூட உனக்குத் தகவல் அனுப்பலாகாதென்று சொல்லி விட்டார். உன்னுடைய நிலைமை மோசமாகி விடுமோ என்ற பயத்தால்தான்! ஆனால் அம்பிகா பாபுவோ, ஒரு கணம்கூடத் தன் மனைவியை அப்பால் இப்பால் போக விடவில்லை. அவள் தன் கண் மறைவாகச் சென்றுவிட்டால் உயிர்போய் விடும் என்று அவர் பயந்தார். தன் மனைவியைத் தவிர்த்து வேறு யார் கையினாலும் அவர் மருந்துகூட வாங்கிச் சாப்பிடுவதில்லை. இப்படி நீ எங்காவது கேள்விப் பட்டிருக்கிறாயா? இரவு பகல் என்று பாராமல் உழைத்து அவள் உடம்பு துரும்பாகப் போய் விட்டது" என்றாள்.

இந்துமதி 'உம்' கொட்டி விட்டு எழுந்து நின்றாள். "இன்னொரு நாளைக்கு வந்து உன்னுடைய சதி சாவித்திரியுடன் பேசிக்கொள்கிறேன். இன்று வண்டி வந்து விட்டது. போய் வருகிறேன்" என்றாள்.

"சரி, நாளைக்குக் கட்டாயம் வரவேண்டும். பேசிப் பேசியாவது சுகமடைந்து கொள்ளு."

"பார்க்கலாம், என்னவோ கொஞ்சம் கற்றுக் கொள்கிறேன்" என்று முகத்தைச் சுளித்துச் சொல்லிக் கொண்டே இந்து போய் வண்டியில் உட்கார்ந்தாள்.

அம்பிகா பாபுவின் பைத்தியக்காரத் தனத்தை எண்ணி அவள் வழி நெடுகச் சிரித்துக் கொண்டே போனாள்.

அத்தியாயம் 5

இரண்டு மூன்று நாளைக்கப்புறம் பேச்சுவாக்கில் இந்து மிகக் கோபமடைந்து, "உண்மையைக் கேட்டுக் கோபமடையா திருந்தால் சொல்கிறேன். மன்னி! கலியாணம் ஆகாமல் இருந்திருந்தாலும் உன் அண்ணாவுக்குப் பரவாயில்லை. ஆனால் அம்பிகா பாபுக்கு அப்படி அல்ல" என்றாள்.

விமலா "ஏன்?" என்று கேட்டாள்.

"ஏனென்றால் குடும்பத்தை நடத்தச் சக்தியில்லாவிட்டால் அது மகா பெரிய பாவம்!"

இதைக் கேட்டு விமலா மிகுந்த வருத்தமடைந்தாள். இந்துவை அவள் ரொம்பவும் நேசித்து வந்தாளாகையால் இந்துவின் வார்த்தைகள் அவள் மனதைப் பெரிதும் புண்படுத்தின.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, "அம்பிகா பாபு செய்தது தவறா யிருக்கலாம். ஆனால், அவருடைய மனைவி தன் கடமையைச் செய்யா திருப்பதா? அவள் இறக்கும் வரையிலும் பதிக்கு சேவை செய்துதானே ஆக வேண்டும்?" என்றாள் விமலா.

"ஏன் செய்தாக வேண்டும்? அவர்கள் அக்ரமம் செய்வார்கள். அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதையும் செய்வார்கள். ஆனால், அதன் பலனை அனுபவிப்பது நாம்தானா? நீ இங்கிலீஷ் படித்ததில்லை. மற்ற சமூகங்களைப் பற்றியும் உனக்கு ஒன்றும் தெரியாது. நான் ஒன்று உனக்குச் சொல்கிறேன், கேள். கடமை என்பது ஒரு சாராருக்கு மட்டும்

ஏற்பட்டதன்று. இரு சாராருக்கும் உண்டு. இல்லா விட்டால் ஒன்றும் முடியாது. ஆண்கள் இதை நமக்குத் தெரியவிடுவதில்லை. அவர்கள் ஏன் நமக்குத் தெரிவிப்பதில்லை தெரியுமா? நாம் அம்பிகா பாபுவின் மனைவியைப் போல, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சேவை செய்வதால்தான்!"

விமலா கணநேரம் அசைவற்றிருந்தாள். "இருக்கட்டும், நாம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? சேவை செய்வதென்பது ஸ்திரீகளுக்குப் பெரிய கடினமான காரியம் என்று நீ நினைக்கிறாயா? அம்பிகா பாபுவின் மனைவி வெளிக்குத்தான் மெலிந்தவள்போல் உனக்குத் தோன்றுகிறாள். ஆனால் உள்ளுக்குள் அவள் அடையும் ஆனந்தத்தை உன்னால் அறிந்துகொள்ள முடியுமா?"

"நான் அறிய விரும்பவில்லை."

"கணவருடைய அன்பைக்கூட ஒருவேளை தெரிந்துகொள்ள ஆசைப்பட மாட்டாயாக்கும்?"

"இல்லை, விமலா. பிரியமில்லை. ஆனால் அன்பைக் குறைத்துக்கொண்டு தன் கடமையை அவர் செய்தால் க்ஷேமந்தான்."

விமலா நின்றுகொண் டிருந்தாள். பொங்கி வரும் பெருமூச்சை அடக்கிக்கொண்டே அவள் உட்கார்ந்தாள்.

"இதே வார்த்தையை இதற்கு முன்பும் ஒரு தடவை சொல்லி இருக்கிறாய். ஆனால் என் அண்ணா கடமையி லிருந்து என்னத்தைத் தவறிவிட்டார் என்பது அப்பொழுதும் தெரியவில்லை, இப்பொழுதும் தெரியவில்லை. அந்தக் கடமை என்ன என்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். எத்தனையோ புத்த

கங்களைப் படித்திருக்கிறாய். எத்தனையோ தேசங்களைப் பற்றி அறிந்திருக்கிறாய். உன்னோடு தர்க்கம் செய்வது எனக்கு அழகல்ல. இருந்தாலும், கணவன் என்ன செய்தாலும் அவனுடைய அன்பை அலட்சியம் செய்கிற மௌட்டீகம் எந்த தேசத்துப் பெண்களுக்கும் கிடையாது. அந்த வஸ்துவை இழந்த பிறகு அப்புறம் செத்துப் போவதே மேல் என்று எனக்குப் படுகிறது. அந்த அன்பை இழந்த பிறகும் வாழ்வது வெறும் கேலிக் கூத்தாகும்."

"இதை நான் ஒருகாலும் ஒப்புக்கொள்வதில்லை."

"அவசியம் ஒப்புக்கொள்ள வேணும்" என்று சொல்லி, விமலா சிரித்தாள். இவ்வளவு தூரம் அவள் சொன்னதுகூட விளையாட்டுக்குத்தான் என்று தோன்றும்படி அபினயம் செய்தாள். வாஸ்தவத்தில் பெண்கள் இப்படிப் பேசிக்கொள்வது, விளையாட்டைத் தவிர வேறு என்ன ?

"மன்னி, நான் சொல்லி விடுகிறேன். கண்டபடி என்னிடம் கதை அளக்கிறாய். ஆனால் அண்ணாவிடம் நீ கற்ற வித்தையைக் காட்டி விடாதே. ஏனென்றால் அவர்கள் ஆண்கள் பார்! எத்தனை பெரிய புத்திமானாயிருந்தாலும் அடிக்கடி..........." என்று சொல்லி நிறுத்தினாள் விமலா.

"அடிக்கடி என்ன ?" என்றாள் இந்து.

"வேடிக்கை அவர்களுக்குப் புரிவதில்லை" என்றாள் விமலா.

"இது அவர்களைப் பொறுத்தது. இதற்காக நான் கவலை கொள்வதில்லை."

"என்னால் என்னவோ யோசிக்காமல் இருக்க முடிவதில்லை, மன்னி."

இந்துமதி சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "ஏனோ?" என்றாள்.

விமலா சற்று யோசித்துவிட்டு, "கோபித்துக் கொள்ளாதே மன்னி. அண்ணா நோயுற்றிருக்கும் போது உன்னைக் காணாமல் எங்கே அவனுக்குக் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று எனக்குப் பயமாயிருந்தது. கஷ்டப்படாமல் சுகம் கிடைக்குமா? இப்பொழுது ஒரு வேளை அந்த எண்ணம் இல்லாமலிருக்கலாம்."

திடீரென இந்துவின் முகம் கறுத்தது. அதன் பிறகு சிரமத்துடன் சிரித்துக்கொண்டு, "உனக்கு கோடி நமஸ்காரம் விமலா! உன் அண்ணாவிடம் சொல்லு. நான் இவைகளையெல்லாம் துளிக்கூடப் பொருட்படுத்துவதில்லை. நல்லது கெட்டது என்னவானாலும் சரி, நானே தான் சமாளித்துக் கொள்ளுவேன். அதற்காக மற்றவர்களுக்குக் கஷ்டத்தைத் தர நான் முன்வர மாட்டேன். இதை நீ நன்றாகத் தெரிந்து கொள்" என்றாள்.

வீட்டிற்கு வந்ததும் கணவனுடைய அறைக்குள் நுழைந்து, "நான் மிதுனப்பூர் சென்றதற்கப்புறம் நீங்கள் நோயுற்றிருந்தீர்களா?" என்றாள்.

நரேந்திரன் சற்றுத் தலையை உயர்த்தி, "இல்லை, நோய் ஒன்றுமில்லை, வலிதான் கொஞ்சம் உண்டாயிற்று" என்றான்.

"செலவு ஏற்பட்டுவிடுமென்று தானே தங்கையின் வீட்டுக்குப் போய் விட்டீர்கள்?"

மனைவியின் இக் கடூரமான பேச்சைக் கேட்டு

நரேந்திரன் மௌனமானான். கொஞ்ச நேரம் கழித்து மெதுவாக "விமலா வந்து கூட்டிக் கொண்டு போனாள்" என்றாள்.

"அனாதைகளுக்காகவேதான் ஆஸ்பத்திரிகள் கட்டி வைத்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். பிறத்தியாருக்கு சுமையாக இல்லாமல் அங்கே போய் இருந்திருக்கலாமே?"

நரேந்திரன் ஒன்றுமே பேசவில்லை. இந்து உடனே அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டாள். அவள் சென்ற வேகத்தில் ஒரு கண்ணாடி கிளாஸ்கூட கால் தடுக்கி உடைந்துவிட்டது. அவள் அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு மறுபடியும் அறைக்குள் நுழைந்து, "மன்னி எனக்குத் தகவல் கொடுக்க விரும்பினாளே, நீங்கள் ஏன் தடுத்தீர்கள்? ஒருவேளை மருந்துடன் பாஷாணத்தையும் கொடுத்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டீர்களா?" என்றாள்.

நரேந்திரன் தலையை உயர்த்தி, "இல்லை, அப்படி நினைக்கவில்லை. உனக்கும் உடம்பு சரியில்லை..........."

"நன்றாகத்தான் இருந்தேன். தகவல் தெரிந்திருந்தால்கூட வந்திருக்க மாட்டேன். இது நிச்சயம். நானும் அங்கு ஜுரத்தால் இறக்கப் போகிறேனென்று உங்களுக்குக் கடிதத்தில் ஒன்றும் எழுதவில்லை. வீணாகப் பொய் வார்த்தைகளைக் கூறி மன்னியையும் கடிதம் எழுதுவதைத் தடுத்துவிட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு, அவள் வந்தது போலவே வேகமாகச் சென்று விட்டாள்.

நரேந்திரன் முன்போலவே புத்தகத்தை விரித்துப் பிடித்துக் கொண்டான். ஆனல், ஒரு எழுத்தாவது அவன் கண்ணில் படவில்லை!

இந்துமதி கதவோரத்தில் நின்று கொண்டு டாக்டரிடம், "நீங்கள்தானே ககன பாபு வீட்டில்என் கணவருக்கு வைத்தியம் பார்த்தீர்கள்" என்ருள்.

அந்த வயோதிக டாக்டர் இந்துவை ஒருதரம் பார்த்துவிட்டு, "ஆம்" என்று ஒப்புக் கொண்டார்.

"ஆனல் அவர் இன்னும் பூரண குணம் அடையவில்லை போலிருக்கிறது. இந்தாருங்கள், உங்கள் 'பீஸ்' தொகை. இன்றைக்கு ஒரு தடவை சிநேக முறையில் அவரை வந்து பார்த்தால், பெருத்த உபகாரம் செய்தவராவீர்கள்" என்ருள்.

டாக்டர் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனர். அவள் அதை அறிந்து கொண்டாள். "அவருடைய சுபாவமே அப்படித்தான். சிகிச்சை செய்து கொள்ளமாட்டார்" என்ருள்.

டாக்டரும் அதை ஒப்புக்கொண்டார்.

"அம்மா, வல்லபப் பத்தர் வந்திருக்கிருர்" என்று ராமன் வந்து சொன்னன்.

"வந்து விட்டாரா? கூட்டி வா" என்ருள் இந்து.

"ஓ, வல்லபா! கொஞ்சம் வேலை இருக்கிறது. நமக்கு ரொம்பவும் நம்பிக்கையுள்ள ஆசாமி, இந்த மோதிரங்களை நீ விற்றுக் கொடுக்க வேண்டும். பழைய காலத்து மோதிரமப்பா இது! இப்போது இதைப் போட்டுக் கொள்வதில்லை. இந்தப் பணத்தில் வேறு ஒன்று புதிதாக வாங்க வேண்டுமென்று எண்ணி இருக்கிறேன்."

"அப்படியே ஆகட்டும், அம்மா, விற்றுத் தருகிறேன்."

"தராசு கொண்டு வந்திருக்கிறாயா? எவ்வளவு இருக்குமென்று கண்ணால் பார்த்தாலே தெரியாதா? பணம் எனக்கு நாளைக்கே வேண்டும். தாமதம் ஆகக்கூடாது."

"சரி, நாளைக்கே கொடுத்துவிடுகிறேன்."

வல்லபன் மோதிரத்தைக் கையில் வாங்கிக் கொண்டு, "இது ரொம்பப் புதுமையா யிருக்கிறதே! விற்பதற்குச் சற்று சிரமப்பட வேண்டும்" என்றான்.

"அது போகிறது. இது எனக்குப் பிடிக்கவில்லை. இதைக் கேளப்பா. பாபுஜீயிடம் இதைப் பற்றிச் சொல்லக்கூடாது."

பாபுஜீகளுக்குத் தெரியாமல் நகைகளை விற்பது வல்லபனுக்குத் தெரியாத விஷயம் அல்ல! அவன் மெதுவாகச் சிரித்துக் கொண்டே மோதிரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்.

அத்தியாயம் 6

"டாக்டர் சாஹிப், ஐந்து ஆறு புட்டி மருந்து சாப்பிட்டும் மார்பு வலி இன்னும் தீரவில்லையே?" என்று கேட்டாள் இந்து.

"தீரவில்லையா? அவர் ஒன்றும் சொல்லவில்லையே?" என்றார் டாக்டர்.

"அவர் சுபாவமே இதுதான் என்பது உங்களுக்குத் தெரியுமே? அவருக்கு உடம்பு குணமாகவில்லை என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. அதோடு உடம்பும் தேறவே இல்லையே!"

டாக்டர் யோசித்துப் பார்த்துவிட்டு, "பாருங்கள், எனக்குக்கூட சந்தேகமாக இருக்கிறது. வெறும் மருந்தினால் மட்டும் ஒன்றும் தீராது. ஒருதரம் அவசியம் இடம் மாற்றவேண்டும்" என்றார்.

"இதை நீங்கள் அவரிடத்தில் ஏன் சொல்லவில்லை?"

"ஒருநாள் சொன்னேன். ஆனால் அவர் இதன் அவசியத்தை உணரவில்லை."

"அவர் உணராவிட்டால் என்ன ஆவது? நீங்கள் டாக்டர். நீங்கள் சொல்கிறபடி நடந்துதானே ஆகவேண்டும்?"

வயோதிக டாக்டர் சற்றுச் சிரித்தார்.

இந்து நாணத்துடன், "பாருங்கள், எனக்கு ஒரே துக்கமாக இருக்கிறது. நீங்கள் அவருக்கு ரொம்பவும் பயங் காட்டவேண்டும்" என்றாள்.

டாக்டர் மெதுவாகத் தலையை அசைத்துக்

கொண்டு, "இந்த வியாதிகளிலெல்லாம் பயம் இருக்கத்தான் இருக்கிறது!" என்றார்.

இந்துவின் முகம் களை கெட்டுவிட்டது. "நிஜமாகவே பயம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

அவளுடைய முகத்தைப் பார்த்துவிட்டு டாக்டரால் உடனே ஒரு வார்த்தையும் சொல்ல முடியவில்லை. இந்துவின் கண்களில் நீர் வழிந்தது. "நான் உங்கள் குழந்தை மாதிரி. டாக்டர் சாஹிப், என்னிடத்தில் ஒன்றும் ஒளிக்காதீர்கள். உள்ள விஷயத்தை அப்படியே என்னிடம் சொல்லுங்கள்" என்றாள்.

உண்மையிலேயே அதைப்பற்றி டாக்டருக்கும் ஒன்றும் தெரியாது! அவர் பலவிதமாக எவ்வளவோ உணர்த்தியும், இந்துவின் பயம் எள்ளத்தனையும் குறையவில்லை. அவள் தன் அறைக்குள் சென்று அழத் தொடங்கினாள்.

சாயங்காலம் நரேந்திரன் கையிலிருந்த பேனாவைக் கீழே வைத்துவிட்டு, திறந்திருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண் டிருந்தான். இந்து அறைக்குள் நுழைந்து, அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள்.

நரேந்திரன் ஒருதரம் முகத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடியும் பார்த்த பக்கமே பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நாளாகவே இந்து மதி பணம் கேட்பதில்லை. இன்று அவள் என்ன உத்தேசத்தோடு வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்பதை நினைக்கவே நரேந்திரனுடைய மனம் நடுங்குகிறது!

இந்து பணம் கேட்கவில்லை! "டாக்டர் சொல்

கிறார். மருந்து குணப்படுத்தாதபோது அவசியம் இடம் மாற்றித்தான் தீரவேணுமாம். ஒரு தரம் போய் வந்தால் என்ன ?"

நரேந்திரன் வாஸ்தவத்திலேயே திடுக்கிட்டுப் போனான். இவ்வளவு நாளாக மறைந்திருந்த 'அன்புக் குரல்' இன்று அவனைக் கூப்பிடுவதுபோலிருந்தது. இந்துமதியின் இந்தக் 'குரலை' அவன் மறந்தேபோயிருந்தான். ஆகையால் அவன் பிரமை பிடித்தவன்போல் அவளையே பார்த்துக்கொண்டு, தனக்குள் என்னவெல்லாமோ யோசித்துக்கொண்டிருந்தான்.

"என்ன சொல்கிறீர்கள் ? நாளைக்கே எல்லாம் தயார் செய்துகொண்டு புறப்படுவதா ? வெகுதூரம் போகவேண்டியதில்லை. இங்கேயே பைஜனத்துக்குப் பக்கத்தில். நாம் இருவரும், கமலா, வேலைக்காரி இவர்களுடன் மட்டும் போகலாம். ராமன் ரொம்ப நம்பிக்கை உள்ள மனிதன். அவன் வீட்டிலேயே இருக்கட்டும். அங்கு ஒரு சின்ன வீடு வாடகைக்கு எடுத்துக்.கொண்டாலே போதும். இன்றைக்கே சாமான்களைத் தயார் செய்ய ஆரம்பிக்கலாம் அல்லவா ?"

பண விஷயத்தைப் பற்றித்தான் ஒரு மாதிரியாக அவனுக்குப் பயம் இருந்தது. இதைக் கேட்கவும் அவனுடைய பயம் சரியல்ல என்பது தெரிந்தது. "இந்த டாக்டரை இங்கே யார் அழைத்து வந்தது ?" என்றான்.

இந்து பதிலளிப்பதற்கு முன் மறுபடியும் அவன், "என்னிடம் டாக்டரை அனுப்பித் தொந்தரவு செய்யவேண்டாமென்று விமலாவிடம்

சொல்லு. நான் நன்ருகத்தான் இருக்கிறேன்" என்ருன்.

விமலா தான் ஒளிவு மறைவாக டாக்டரை அனுப்பி யிருக்கிருளா? எல்லாம் விமலாதான்! இந்துவின் இதயத்தில் சுறுக்கெனத் தைத்தது. இருந்தாலும் வெளிக்கு ஒன்றையும் காட்டாமல். "உண்மையில் உங்களுக்கு உடம்பு சரியில்லை. வலி இன்னும் தீர்ந்தபாடில்லை" என்ருள்.

"குணமாகி விட்டது" என்ருன் நரேந்திரன்.

"இன்னும் உடம்பு தேறவில்லையே. பார்த்தாலே தெரிகிறது. ஒருதரம் வெளியே சென்று வருவதால் ஒன்றும் கெட்டுப்போய் விடாது!"

நரேந்திரன் பொறுமையை இழந்துவிட்டான். ஆனாலும் தன்னை அடக்கிக்கொண்டு, "இடம் மாற்றுவதற்கு எனக்குச் சாமர்த்தியம் போதாது" என்ருன்.

இந்து பிடிவாதத்துடன், "அது முடியாது. உயிர் பிழைத்துத்தானே ஆகவேண்டும்?" என்ருள்.

இந்துவின் பிடிவாதம் நரேந்திரனுக்குப் புதிதாயிருந்தது. தனக்குத் தொந்தரவு கொடுக்க இது ஒரு புது வழி என்றே அவன் நினைத்தான். அவனுக்கு ரொம்பவும் கோபம் வந்தது. "உயிர் பிழைத்தே ஆகவேண்டும் என்று யார் சொல்வது? அப்படி ஒன்றும் அவசியமில்லை. அவசியம் இல்லை என்று ஆயிரம் தடவை சொல்கிறேன். உன் காலைப் பிடிக்கிறேன். இந்து! என்னைச் சும்மா விட்டுவிடு. நான் சாந்தமாக இறக்கிறேன்" என்ருன்.

கணவனுடைய வாயிலிருந்து இப்படிக் கடுமையான வாசகம் வருமெனக் கனவிலேகூட இந்து கருதவில்லை. கற்சிலை போல் ஸ்தம்பித்துவிட்டாள். ஆனால் நரேந்திரனுக்கு இது தெரியாது. "நான் தினசரி எவ்வளவு கஷ்டத்துடன் குடும்பத்தை நடத்துகிறேன் என்பது உனக்குத் தெரியும். எல்லாம் தெரிந்தே எனக்குக் கஷ்டம் விளைவிக்க வேண்டுமென்றுதான், இப்படி யெல்லாம் பேசுகிறாய்! நான் உனக்கு என்ன கெடுதல் பண்ணி விட்டேன்? நீ விரும்புவதுதான் என்ன?" என்றான்.

இந்து பயத்துடன் கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு வார்த்தையும் அவனிட மிருந்து வரவில்லை.

கூச்சல் போடுவதோ அல்லது கோபமடைவதோ தனக்கு எவ்வளவு ஒவ்வாத விஷயம் என்பதை நரேந்திரன் இப்போதுதான் உணர்ந்தான். அவன் குரலைச் சற்றுத் தணித்துக்கொண்டு, "சரி, நான் அவசியம் இடம் மாற்ற வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் எப்படிப் போவேன்? பணம் எங்கிருந்து வரும்? குடும்பச் செலவைச் சரிக் கட்டுவதற்குள்ளே பிராணன் போய் விடும்போல் இருக்கிறதே?" என்றான்.

இந்துமதி மிருந்த துணிச்சலுடையவள். ஆனால் இன்று அவள் கலங்கிப் போய்விட்டாள். மிகவும் பணிவான குரலில், "பணம் இல்லாவிட்டால் போகிறது; விலை உயர்ந்த நகைகள் என்னிடம் இருக்கின்றன...." என்றாள்.

"இருக்கின்றன. ஆனால் அவைகள் என்

னுடையதல்லவே? அவைகளை உன் அப்பா உனக்குக் கொடுத்திருக்கிறார். எனக்கு அதில் துளிக்கூட அதிகாரம் கிடையாது. இவைகளெல்லாம் என்னை விட உனக்கு நன்றாகத் தெரியும்.''

"சரி, அது போகிறது. நான் ரொக்கமாக ரூபாய் தருகிறேன்.''

"ரூபாய் ஏது? குடும்பச் செலவிலிருந்து மிச்சம் பிடித்ததா?''

"ஆம்.''

அது மோதிரம் விற்ற பணம்! இந்து சுலபத்தில் பொய் பேசமாட்டாள்! ஆனால் அன்றைக்குப் பொய் பேசுவதென்றே கங்கணம் கட்டிக்கொண்டாள். நரேந்திரனுடைய முகம் மிகக் கடுமையாயிருந்தது. அவன் மெதுவாக, "பணத்தை நீயே வைத்துக்கொள். வேண்டுமானால் ஏதாவது நகையும் செய்துகொள். நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் அது. அந்தப் பணத்தை அனாவசியமாக வீணாக்க விடமாட்டேன். இந்து, நான் உன்னிடம் எப்போதும் கடுமையாகப் பேசியதில்லை. எப்போதும் சாந்தமாகவே நடந்திருக்கிறேன். ஆனால் அன்று நீ, 'நான் எப்பொழுதும் பொய் சொல்லமாட்டேன்' என்று கர்வத்துடன் சொல்லவில்லையா?....'' என்றான்.

கமலா அதற்குள் ஓடி வந்து, "அம்மா! அத்தை வந்திருக்கிறாள்'' என்றாள்.

"என்ன செய்துகொண்டிருக்கிறாய், மன்னி?'' என்று சொல்லிக்கொண்டே விமலாவும் அருகில் வந்து நின்றாள்.

இந்து பெண்ணின் கழுத்திலுள்ள சங்கிலியைப்

பிடுங்கிக் கணவன் எதிரில் விசிறி எறிந்துவிட்டு, "எனக்குப் பொய்பேசத் தெரியாமல்தான் இருந்தது. இதை உங்களிடமிருந்து தான் கற்றுக்கொண்டேன். இருந்தாலும் பித்தளையைப் பொன் என்று கூறும் வித்தையை இன்னும் உங்களிடமிருந்து நான் கற்றுக்கொள்ளவில்லை! பெண்ணையும் மனைவியையும் ஏமாற்றுகிறவர் என்னதான் செய்யமாட்டார்? மற்றவர்களை, அவர் பொய்யர் என்று குற்றம் சாட்டுவது வேடிக்கையாகவே இருக்கிறது!' என்றாள்.

நரேந்திரன் சங்கிலியைக் கையில் எடுத்துக் கொண்டு, "இது பித்தளை என்று உனக்கு எப்படித் தெரியும்? சோதித்துப் பார்த்தாயா?" என்றான்.

"உங்கள் தங்கையிடம் கொடுத்தே சோதித்துப் பார்க்கச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, கண்கள் சிவக்க விமலாவைப் பார்த்தாள் இந்துமதி.

"அண்ணா கொடுத்ததை ஆசாரியைக் கூப்பிட்டுப் பரிசோதித்துப் பார்ப்பதென்பது என்னால் முடியாத காரியம், அம்மா!" என்று சொல்லிக் கொண்டே, விமலா இரண்டடி பின்னால் சென்றாள்.

"இந்து, இதற்கு முன் இரண்டொரு வைரம் உனக்குக் கொடுத்தேனே? அதையும் சோதித்துப் பார்த்தாயா?" என்று கேட்டான் நரேந்திரன்.

"பார்க்கவில்லை. ஆனால், இப்போது பார்த்தாக வேண்டும்."

"பார்ப்பதற்கு இவை பித்தளையைப் போல் இல்லை" என்று சொல்லியபடி தன் தங்கையின் புறம் சங்கிலியைக் காட்டிக்கொண்டு, "இது தங்கம் அல்ல, விமலா! பித்தளைதான். என் குழந்தையின்

பிறந்த தினக் கொண்டாட்டத்தின்போது எத்தனை துக்கத்தோடு ஏமாற்றினேன் தெரியுமா? ஆனாலும் பெண்ணைத்தான் ஏமாற்றினேன். மனைவியை ஏமாற்றத் துணியவில்லை!'' என்றான் நரேந்திரன்.

அத்தியாயம் 7

"என் பேச்சைக் கேளு, மன்னி. அவர் காலில் விழுந்து ஒரு தரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்."

"ஏன்? எதற்காக? என் தலையைத் துண்டாக வெட்டிப்போட்டாலும் நான் அப்படிச் செய்யமாட்டேன்."

"ஏன் செய்யமாட்டாய்? கணவன் காலைத் தொடுவதில் என்ன வெட்கம்? உன் குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் போகிறது. ஆனால் அவரை மனம் குளிரச்செய்வது எல்லாவற்றிலும முக்கியமானதல்லவா?"

"முடியாது! என்னால் அது முடியாது! நான் ஆண்டவன் ஒருவனுக்கே அஞ்சி நடப்பேன். அவரிடத்தில் ஒரு குற்றமும் செய்யாதவரையில் நான் யாருக்கும் பயந்து நடக்கமாட்டேன்!"

விமலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "மன்னி, இப்படி நீளநீளமாகப் பேசுவதற்கு எனக்குக்கூடத் தெரியும். இதெல்லாம் கவைக்கு உதவாது. நாம் கண்ணை மூடிக்கொள்வதால் உலகமே அஸ்தமன மடைந்துவிடாது! அண்ணா நிஜமாகவே உன்னிடம் வெறுப்புக் கொண்டிருக்கிறான்."

இந்துமதி உதாசீனத்துடன், "அது அவர் இஷ்டம்" என்றாள்.

விமலா மனதிற்குள்ளாகவே கொதிப்படைந்

தாள். "அவர் இஷ்டம் என்பதெல்லாம் அழிந்து போகும் அன்றைக்குத்தான் தெரியும். அண்ணு எவ்வளவு கோமளமானவனே அவ்வளவு கடூர மானவனும்கூட. நீ அவனை ஒரு கோணத்தி லிருந்துதான் பார்த்திருக்கிருய். மற்றப் பக்கங் களைப் பார்க்கவில்லை."

"சரி, பார்க்கும்போது உனக்குத் தகவல் கொடுக்கிறேன்."

விமலா மேலே ஒன்றும் பேசவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு பெருமூச்சு விட்டுக்கொண்டே மெதுவாக, "அது நிஜம். கணவனுடைய அன்பு 'மாருமலே இருக்கும்' என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறது. ஆனல் அண்ணு அந்த ரகத்து மனிதன் அல்ல. அவன் நோயுற்றிருந்தபோது நான் நன்கு அவனை உணர்ந்திருக்கிறேன். அவ னுடைய இதயக் கதவு ஒரு தரம் மூடுண்டதானல் பிறகு என்றென்றைக்கும் திறக்கவே திறக்காது" என்ருள்.

இந்து கம்பீரமாகவே "திறக்காவிட்டால் வெளியிலேயே நிற்கிறேன். கதவு திறக்கட்டும் என்பதற்காக அவர் காலில் விழுந்து வணங்கமாட் டேன். அதற்காக உன்னையும் சிபார்சுக்கு அழைக்கமாட்டேன்!........என்ன இது? கோபித் துக்கொண்டு போகிருயா?" என்ருள்.

விமலா திரும்பி நின்று, "கோபத்தோடு அல்ல மன்னி. துக்கத்தோடு போகிறேன். என் னுடைய தங்கையைவிட உன்னை நான் அதிகமாக நேசித்தேன். இதனல் எனக்குத் துக்கம் பொங் கிப் பீறிட்டுக்கொண்டு வருகிறது. அண்ணுகூட

இப்படிச் சொல்வானு என்பதை நான் காதால் கேட்டிருக்காவிட்டால் நம்பக்கூட மாட்டேன்" என்ருள்.

இந்துமதி சிரித்துக்கொண்டு, "இந்தப் பெரிய பீடிகையை இனி எப்பொழுதும் அவரிடமிருந்து நீ கேட்கப்போவதில்லை" என்ருள்.

"பீடிகை விஷயத்தில் நீயும் ஒன்றும் குறைந்தவள் அல்ல, மன்னி. இனி அவர் அப்படிப் பேச மாட்டார் என்பது எனக்கும் தெரியும். ஒரு சங்கதியைப் பன்னிப் பன்னிச் சொல்கிற ஆசாமி அல்ல அவர்."

இந்து மறுபடியும் சிரித்துவிட்டு, "அது சரி தான். அதைவிட இன்னெரு காரணத்தினுல் எப்பொழுதும் அவர் கோபத்துடன் பேசத் துணிய மாட்டார். என் அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. என் பெயருக்கு அப்பா பத்தாயிரம் ரூபாய்க்கு உயில் எழுதி வைத்திருக்கிருர். என்ன சொல்கிருய், மன்னி? இனியும்கூடக் காலைப் பிடிக்கவேண்டுமா?" என்ருள்.

விமலாவின் முகம் மிகக் கடுமையாக இருண்டு விட்டது. "மன்னி! இதற்கு முன் எப்பொழுதும் அவர் உன்னிடம் கோபமாக நடந்து கொண்டது கிடையாது. அவரை எந்த நிலைமையில் விட்டு நீ மிதினப்பூர் சென்ருய் என்பது எனக்கு ஒருத்திக்குத்தான் தெரியும். அதற்காக அவர் உன்னை ஒரு நாளும் குறை கூறியது கிடையாது. சிரித்த முகத்துடன் என்னிடம்கூட எல்லாவற்றையும் சொல்லாமல் மறைத்து வந்தார். இவைகளெல்லாம் உன்னுடைய பணத்தை உத்தேசித்தா? மன்னி,

சிரத்தை இல்லாத காதல் நிலைப்பதில்லை. நீ எந்த வஸ்துவைப் பொருட்படுத்தாமல் இழந்து கொண் டிருக்கிறாயோ, அதைப் பூரணமாக இழந்த பிறகே தான் உன் மனதில் தைக்கும். ஆனால் என்னுடைய அண்ணா அவ்வளவு அற்பமானவன் அல்ல என்பதை மனதில் வைத்துக்கொள்ளு. இப்போது நேரமில்லை. நாழியாகி விட்டது. நான் போகிறேன். நாளை மறு நாள் ஓய்வு கிடைக்கிற போது, வீட்டுக்கு வா" என்றாள்.

"சரி" என்று கூறிவிட்டு இந்துமதி வெளிக் கதவு வரை பின்னால் வந்தாள். அவள் பின்னால் வருகிற காலடி ஓசை கேட்டும் கேட்காதவள் போல் நடந்தாள் விமலா.

வண்டியில் ஏறிய பிறகு கூட இருவரும் அளவளாவிக் கொள்வார்கள். இன்று வண்டியில் உட்கார்ந்ததும், விமலா வண்டிக் கதவை மூடி விட்டாள்.

வீட்டிற்குள் வந்ததும் இந்துமதி குழந்தையை மார்போடு அணைத்துப் படுத்துக் கொண்டாள்.

விமலா சென்று விட்டாள். ஆனாலும் அவளுடைய கடுமையான பேச்சுக்கள் ரீங்காரம் செய்து கொண்டே இருந்தன. அதில் எவ்வளவு கடுமை யிருந்தது என்பது இப்போதுதான் இந்துவுக்குத் தெரிய வந்தது. அந்தக் கோபத்தால் இவள் உள்ளமே கனலாகக் காய்ந்தது. அந்த அனல் ஓட்டத்துக்கு அடியில் மண்டிக் கிடந்த குப்பை கூளம், செத்தை சருகு எல்லாவற்றையும் இவள் கனவில்கூடக் கருதிப் பார்க்கவில்லை.

திடீரென உள்ளத்துக் குள்ளிருந்து யாரோ

கேட்பது போலிருந்தது. "இந்துமதியின் கதி என்ன? உள்ளபடியே கணவன் கைவிட்டு விட்டால்! நீ அருகில் சென்று உட்காரு, ஆனல் அவர் வெறுப்புடன் எழுந்து சென்று விட்டால்?"

அவளுடைய தேகத்தில் மயிர்க் கூச்செறிந்தது. "என்னம்மா?" என்று கமலா கேட்டாள்.

இந்து அவளை இறுகத் தழுவி முத்தமிட்டு, "உன்னுடைய அத்தை என்னவெல்லாம் பயங் காட்டுகிறுள் தெரியுமா?" என்றுள்.

"என்ன பயம் அம்மா?"

"ஒண்ணுமில்லே கண்ணே! எல்லாம் விளையாட்டுப் பேச்சுத்தான். வெறும் விளையாட்டே தான்! போ அம்மா! போய், அப்பா என்ன செய்கிறுர் என்று பார்த்து விட்டு வா."

அப்பாவிடம் குழந்தை ஓட்டமாக ஓடியது.

இந்த இரண்டு நாளாகத் தம்பதிகளுக்குள் பேச்சு வார்த்தை இல்லே. கமலா திரும்பி வந்து "அப்பா பேசாமே தூங்கறுர் அம்மா" என்றுள்.

"பேசாமலா? சரி, நீ இங்கேயே தூங்கு அம்மா. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு இந்து எழுந்து போனுள் கதவருகே போய் எட்டிப் பார்த்தாள். குழந்தை சொன்னது சரிதான். சோபாவில் மேலே பார்த்த படியே அவர் படுத்துக் கொண்டிருந்தார். இன்று அறைக்குள் பிரவேசிப்பதற்கு அவளுக்குத் துணிவு உண்டாகவில்லே. இது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"கமலா!"

"என்ன அம்மா?"

"உங்க அப்பாவுக்கு ரொம்பத் தலையை வலிக்கும் போலிருக்கிறது. போய்க் கொஞ்சம் தலையைப் பிடித்து விடு அம்மா" என்றாள்.

பெண்ணை அனுப்பிவிட்டு இந்து மறைவில் நின்றுகொண்டு உற்சாகமாக இருவரும் சம்பாஷிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏன் தலை வலிக்கிறது. அப்பா?"

"இல்லையே? வலி இல்லையே அம்மா!"

"ரொம்பத் தலை வலிக்கிறதென்று அம்மா சொன்னாளே?"

அப்பா சற்று நேரம் குழந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் பொறுத்து, "உன் அம்மாவுக்குத் தெரியாது." என்றான்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு ஒன்றும் தெரியாதவள் போல் இந்து உள்ளே நுழைந்தாள். மேஜைமீதிருந்த விளக்கை சற்று மட்டுப்படுத்தி விட்டு, "பலவீனமான உடம்போடு இப்படி உழைத்தால் தாங்குமா? போ கமலா, மேலே மருந்துப்புட்டி இருக்கிறது. எடுத்துக்கொண்டு வா" என்றாள்.

பெண்ணை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, தலைப்புறமாகப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் இந்து. தலையைக் கோதி விட்டுக் கொண்டே, "நெருப்பாகக் கொதிக்கிறது" என்றாள்.

நரேந்திரன் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தான். ஒன்றும் பேசவில்லை. இந்து

மௌனமாகத் தலையைக் கோதி விட்டுக்கொண்டே அன்புடன். "மார்பு வலி இன்று எப்படி இருக்கிறது?" என்றாள்.

"அப்படியேதான் இருக்கிறது."

"இரண்டு நாளாகக் கோபத்தில் மருந்து குடிக்க வில்லையே? வலி அதிகரித்து விட்டால் என்ன செய்வது?"

நரேந்திரன் மெதுவாக, "எனக்கு உடம்புக்கு சரியில்லை. கொஞ்சம் அமைதியாக இருக்க விரும்புகிறேன், இந்து" என்றான்.

அந்தக் கேள்விக்கு இந்தப் பதில்தானா!

இந்துமதி சடக்கென மின்னல்போல் எழுந்து நின்றாள்.

"சரி, படுத்துக்கொள்ளுங்கள் உங்கள் அறைக்குள் நுழைந்தது என் குற்றம்" என்றாள்.

பிறகு கதவருகில் வந்து நின்றுகொண்டு, "நீங்கள் இறப்பதால் என்னைத் தண்டிக்க முடியாது. இந்தக்கடிதத்தைப் படித்துப் பாருங்கள். அப்பா என் பெயருக்குப் பத்தாயிரம் ரூபாய் உயில் எழுதி வைத்திருக்கிறார்" என்று கூறி, தன் இடது கையில் இருந்த கடிதத்தை வீசி யெறிந்துவிட்டு, வெளியியே வந்தாள். பின்பு முந்தானையால் பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே தன் அறைக்குள் வந்து கதவை இழுத்துச் சாத்திப் படுத்துக்கொண்டாள். எதையும் பொறுத்துக் கொள்ளவோ அல்லது தோல்வியை ஒப்புக்கொள் வதோ அவளால் முடிகிற காரியம் அல்ல. பெரும் பாலான பெண்களாலேயே முடிவதில்லை! இன்றைக்கு அவள் என்ன வெல்லாமோ எண்ணியிருந்த

உயர் எண்ணங்கள் கூட இதனல் தடைப்பட்டுப் போச்சு! அவள் என்ன செய்ய வந்தாள்? என்ன செய்துவிட்டுப் போனுள்?

அத்தியாயம் 8

“ இது என்ன, அக்கா? அழுதுகொண்டிருந்தீர்களா? உங்கள் கண்கள் இரண்டும் செவ்வரளிப் பூப்போல சிவந்திருக்கிறதே?”

அம்பிகா பாபுவின் மனைவி கேட்டுக்கொண்டிருந்தாள். விமலா குப்புறப் படுத்தபடியே புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். அவள் சட்டென எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு சிரித்தாள். “அப்பா, துர்க்காமணியின் துக்கம் நெஞ்சைப் பிளந்துவிடும்போல் இருக்கிறது, மன்னி” என்றாள்.

“யார் துர்க்காமணி?”

“விளையாடாதே மன்னி; துர்க்காமணி யாரென்று தெரியாது? எங்கே பார்த்தாலும் அவளுடைய பெயர் பிரசித்தமாயிருக்கிறது. உனக்கு அது தெரிந்தே இருக்கும்.”

இந்துமதிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ ஒரு புத்தகத்தைப்பற்றிச் சொல்கிறதாக மட்டும் நினைத்துக்கொண்டாள். “எங்கே புஸ்தகத்தைக் கொடு” என்று கை நீட்டினாள். புத்தகத்தைக் கையில் வாங்கியதும், அந்தப் புத்தகாசிரியர் தன்னுடைய கணவர்தான் என்பதைக் கண்டாள். முதல் பக்கத்தைப் புரட்டியதும், விமலாவுக்குச் சமர்ப்பணம் செய்திருப்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. இந்து புத்தகத்தை முதலிலிருந்து கடைசி வரை புரட்டிப் பார்த்துவிட்டு வைத்துவிட்டாள். கணவனால் எழுதப்பட்டு, அச்சிடப் பெற்று, சமர்ப்

பணமும்கூடச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவளுக்கோ இதைப்பற்றித் துளிக்கூட தெரிந்திருக்கவில்லை! இந்துவின் முக மாறுதலைக் கண்டு, விமலாவுக்குப் பேச்சு ஓடவில்லை! இந்துவேதான் பேசினாள். "நாடகம், நாவல் முதலியவைகளைப் படிக்க நான் விரும்புவதில்லை, மேலும் அவைகள் எனக்கு நன்றாகவும் இருப்பதில்லை, எப்படியோ இருக்கட்டும். நன்றாயிருக்கிறது என்பதைக் கேட்க எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது" என்றாள்.

அம்பிகா பாபுவினுடைய வேலைக்காரன் வந்து அவருடைய மனைவியிடம், "இன்று நீங்கள் 'செத்த காலேஜ்' பார்க்கப்போவதாகச் சொன்னீர்களாம். போகிறீர்களா என்பதைப் பாபுஜீ கேட்டுவரச் சொன்னார்" என்றான்.

இந்தப் பெண் வயதில் ரொம்பச் சின்னவள். ஆகையால் தலையைக் குனிந்துகொண்டு மிகுந்த வெட்கத்துடன், "இல்லை, இன்னும் அவர் உடம்பு பூர்ண சுகம் அடையவில்லை. இன்றைக்கு வேண்டாம்." என்றாள்.

வேலைக்காரன் சென்ற பிறகும் திறந்த வாய் மூடாமல் இந்து பார்த்துக்கொண்டே இருந்தாள். தன் வாழ்விலே இப்பேர்ப்பட்ட பேச்சை அவள் கேட்டதே கிடையாது.

இதற்குள் வேலைக்காரி வந்து விமலாவிடம், "பாபுஜீ, ஆபீஸிலிருந்து ஆள் அனுப்பி இருக்கிறார். ஒரு பெரிய அலமாரி ஏலத்தில் போகிறதாம். அதை எடுக்கலாமா என்று கேட்டுவரச் சொல்லியிருக்கிறார்" என்றாள்

விமலா, "வேண்டாம் என்று சொல்லிவிடு. ஒரு சின்ன 'புக் கேஸ்' இருந்தாலே போதும்" என்றாள். வேலைக்காரி அங்கிருந்து கிளம்பினாள்.

இந்துமதி மிகுந்த ஆச்சரியத்துடன் இதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். கணவன்மார்களுடைய கேள்விகள்கூட அவளுக்குப் பிரமாதமாகத் தோன்றவில்லை. ஆனால் இந்தப் பெண்கள் இட்ட 'உத்தரவு' ஒரு வேலைக்காரியினுடையதைப் போல் இருக்கவில்லை! அதோடு அவள் மனதில் ஏதோ ஒரு விதமான வருத்தம் உண்டாகியது. 'எதற்காக அவர்கள் இந்தப் பெண்களிடம் இப்படிப் பணிந்து போகிறார்கள்?' என்ற கேள்வி அவள் மனத்திடை அடிக்கடி எழுந்தது. போகிற போது விமலா மெதுவாக, "மன்னி, உண்மையிலேயே அண்ணாவின் இந்தப் புஸ்தகத்தைப்பற்றி உனக்குக் கொஞ்சம்கூடத் தெரியாதா" என்று கேட்டாள்.

இந்துமதி ரொம்ப அலட்சியமாக, "தெரியாது, இவைகளையெல்லாம் நான் கவனித்துக்கொள்வதில்லை. நாள் முழுதும் உட்கார்ந்து எழுதிக்கொண்டுதான் இருக்கிறார். யார் இதெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பார்கள், சொல்லு! உம், ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! நாளைக்கு நான் ஊருக்குப் போகப்போகிறேன்" என்றாள்.

விமலா அவசரமாக, "வேண்டாம், மன்னி! இப்போது போகக்கூடாது" என்றாள்.

"ஏன்?"

"ஏன? இதைக்கூடச் சொல்லவேண்டுமா மன்னி! அண்ணா தன் சுகதுக்கத்தைப்பற்றி

உன்னிடம் ஒன்றும் கலந்துகொள்வதில்லையே? இது உனக்குத் தெரியாதா? கணவனுடைய அன்பை இழந்துகொண்டிருப்பதுகூட உனக்குத் தெரியவில்லையா?'' என்றாள்.

இந்து அதிகக் கோபத்தோடு, "எனக்கு அதில் விருப்பமில்லை, விருப்பமில்லை என்று எத்தனை தரம் சொல்லி இருக்கிறேன்? நான் எனது அண்ணுவோடு கவலையற்று இருப்பேன். இவர் என்னை இனி எப்பொழுதும் கூப்பிடாதிருக்கட்டும்! என்னை இனியும் தொந்தரவு செய்யாதிருந்தால் போதும்!'' என்றாள்.

இதைக் கேட்டு விமலாவும் கோபமடைந்தாள். "இந்தப் பெரியதனம் எல்லாம் ஆண்களுக்கு முன்னால் காட்டு மன்னி! நான் பெண். என்னிடத்தில் காட்டாதே! உனது தாய் வீடு பணக்காரர்கள் என்று இவ்வளவு அகங்காரம் கொள்கிறாய்? சரி, போவதானால், போ. ஆனால் ஒரு நாளைக்கு நீ இழந்துவிட்டதை உணர்வாய்! அப்போது உனக்கு உலகமே சூன்யமாகத் தோன்றும். உனக்குக் கிடைத்ததுபோன்ற பாக்கியம் வேறு எந்தப் பெண்ணுக்கும் கிடைக்கவில்லை என்பதை நான் உணர்வேன். ஆனால் அதை நீயே துஷ்பிரயோகம் செய்து பாழ்படுத்திக்கொண்டாய்!'' என்றாள்.

அந்தப் புஸ்தகம் விமலா கையில்தானிருந்தது. அது கண்ணில் படவும் இந்துவின் நெஞ்சு கொதித்தது. "அகங்காரம் கொள்வதற்கு ஏதாவது கொஞ்சம் இருக்கும்போதுதான் ஜனங்கள் அகங்காரம் கொள்வார்கள். நான் அழிந்துபோனால் போய் விட்டுப்போகிறேன். அதற்காக நீ துளிக்கூடக்

கவலையடையாதே. நான்தான் வீணுக நின்று கொண்டு நீ சொல்வதை எல்லாம் ஏன் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும் ? எனக்கு இருப்பதற்கு விருப்பமில்லை, இருக்கவும் மாட்டேன். இதனல் என்ன ஆனுலும் சரி, நான் யாரிடமும் சண்டை பிடிக்கவும் தயாராயில்லை, உதவி வேண்டவும் தயாராயில்லை '' என்ருள் இந்து.

விமலா மௌனமாக இருந்தாள். அவளுடைய மன வேதனையைக் கடவுள்தான் அறிவார் ! ஆனல் அவள் இந்த அவமானமான பேச்சுக்குப் பிறகு ஒன்றும் தர்க்கம் செய்யவில்லை.

இந்து போவதற்கு அடி எடுத்து வைத்தாள் உடனே விமலா, "இருமன்னி, நீ என்னைவிட வயதில் மூத்தவள். உன்னை நமஸ்கரிக்கிறேன் " என்ருள்.

அத்தியாயம் 9

அன்று சாயங்காலத்திற்கு முன்பிருந்தே ஆகாயத்தில் மேகங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் மழையும் பெய்யத் தொடங்கியது. இந்து தன் பெண்ணுடன் படுக்கையில் வந்து படுத்துக்கொண்டாள். இன்று விமலாவினுடைய தங்கை கணவன் ஊரிலிருந்து வந்திருந்தான். பக்கத்து அறையில் தங்கையும் அவள் கணவனும் பேசிக்கொண் டிருப்பதைக் கேட்கக் கேட்க அவளுடைய மனத்திலே சொல்ல முடியாத வேதனை எழுந்தது.

அவள் மிதுனப்பூர் வந்து மூன்று மாதங்களாகி விட்டன. அவளுடைய தங்கையும் வந்திருக்கிறாள். அவளுடைய கணவன் இந்த மூன்று மாதத்தில் குறைந்தது ஐந்து ஆறு தடவை வந்துவிட்டுப் போய்விட்டான். ஆனால் நரேந்திரனோ ஒரு தடவை கூட வரவில்லை. ஒரு கடிதங்கூட எழுதி விசாரிக்க வில்லை!

சில தினங்களாக அனைவரும் இதைப்பற்றியே பேச ஆரம்பித்தார்கள். தன் தங்கை எதிரில், எங்கு இதைப்பற்றிப் பேச ஆரம்பித்து விடுவார்களோ என்று எழுந்து தன் அறைக்கு வந்துவிடுவாள்.

தன் கணவன் வருவதில்லை. இதனால் இந்து வருத்தம் அடைந்தாளா இல்லையா என்பது அவளைப் பொறுத்த விஷயம். ஆனால் இதனால் நேரிடும் அவமானத்தை அவள் கற்பனைகூடச் செய்து

பார்க்கவில்லை. அந்த அவமானம் நிழல்போல அவளைத் தொடர்வதுபோ லிருந்தது! கணவன் என்னை விரும்பவில்லை என்பதை அவள் யார் முன்னிலையிலும் துளிக்கூட ஒப்புக்கொள்ளவில்லை.

இதுவரையிலும் அவள் தன் கணவனருகிலேயே இருந்துகொண்டு, தனது மான மரியாதைகளைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தாள். ஆனல் இப்பொழுதோ, அந்நியர் வீட்டில், கண் மறைவில், எல்லாம் புதைந்து போயின! எவ்விதம் அவள் அதை மறுபடியும் நிலை நாட்டுவாள்? இன்று தன் சின்ன மைத்துனர் வந்ததிலிருந்து யார் என்ன பேசினலும் அனைவரும் தன்னிடம் இரக்கம் காட்டுவதாகவே கருதினள். கமலாவிடம் யாராவது அவள் அப்பாவைப் பற்றிக் கேட்கும்போதெல்லாம் அவளுக்குச் செத்துப் போகலாமெனத் தோன்றும். ஊர்போவதைப் பற்றி யாராவது பிரஸ்தாபித்தால் வெட்கத்தால் குன்றிப் போவாள்.

வருவதற்கு முன் அவள் கணவனிடம் எவ்வளவோ கடுமையான வார்த்தைகளைக் கூறியபிறகு கடைசியாக, "குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான யோக்யதை இல்லாததற்கு முன் என்னை அழைக்க வந்து விடாதீர்கள்" என்று சொல்லி வந்திருந்தாள்.

திடீரென அவள் கண்ணை மறைத்திருந்த திரை அகன்றது. "கமலா, ஏனடியம்மா அழுகிருய்?" என்று கேட்டாள்.

கமலா அழுது கொண்டே, "அப்பா உடம்புக்கு எப்படி யிருக்கிறதோ!" என்று சொல்லியது.

இந்துவின் நெஞ்சு பிளந்துவிடும்போ லிருந்

தது. அவள் பெண்ணை மார்போடு அணைத்துக் கொண்டு விக்கிவிக்கி அழத் தொடங்கினாள்.

குழந்தையைத் தவிர அவள் அழுவது வேறு யாருக்கும் தெரியாது.

தாயார் சொல்லிக் கொடுத்ததோ என்னவோ தெரியாது; அடுத்த நாள் அதிகாலையிலிருந்தே கமலா, 'அப்பாவிடம் போக வேண்டுமென்று பிடிவாதம் செய்யத் தொடங்கினாள். முதலில் இந்து சிறிது மிரட்டிப் பார்த்தாள். கடையில் அவள் அண்ணாவிடம் சென்று, "கமலா இருக்க மாட்டேனென்கிறாள். கல்கத்தா போக விரும்புகிறாள்" என்றாள்.

"அவளை ஏனம்மா தடுக்கிறாய்? நாளைக்கே கூட்டிக் கொண்டு போ, நரேந்திரன் எப்படி யிருக்கிறான்? எனக்குக் கடிதமெழுதுவதே இல்லை. உனக்காவது எழுதுகிறானா?" என்றான்.

இந்து தலையைக் குனிந்துகொண்டு பொய்யாக, "எழுதுகிறார்" என்றாள்.

"சௌக்கியமாகத்தானே இருக்கிறான்?"

இந்து அவ்விதமே தலையைக் குனிந்துகொண்டு, "ஆம்" என்றாள்.

* * * *

விமலா ஆச்சரியத்துடன், "எப்பொழுது வந்தாய், மன்னி?" என்றாள்.

"இப்பொழுதுதான் வருகிறேன்."

வேலைக்காரன் வண்டியிலிருந்து இந்துவினுடைய பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தான். விமலா வெறுப்பை வெளிக்குக் காட்டாமல், "இன்னும் வீட்டிற்குப் போகவில்லையா?" என்றாள்.

"இல்லை, கமலாவை மட்டும் வீட்டிற்கு முன்னால் இறக்கிவிட்டு வருகிறேன். அவளுக்காக வர வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால் வந்திருக்கவே மாட்டேன்."

விமலா மிகுந்த துக்கத்துடன், "வராதிருந்தாலே நன்றா யிருந்திருக்கும், மன்னி; நீ வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை" என்றாள்.

இந்து மிகக் கொதிப்படைந்தாள். "ஏன்?" என்று கேட்டாள்.

விமலா ரொம்பச் சாதாரணமாக, "அதை அப்புறம் கேட்டுக் கொள்ளலாம். முதலில் கை காலை அலம்பிக் கொள். நடப்பது நடந்துவிட்டது. இப்போது கேட்டால்தான் என்ன? நாளைக்குக் கேட்டால்தான் என்ன? எல்லாம் ஒன்றுதான்" என்றாள்.

இந்து உட்கார்ந்து விட்டாள். அவள் முகம் வெளுத்துவிட்டது. "அது முடியாது விமலா, விஷயத்தைப் பூராவும் கேட்பதற்கு முன் ஒரு பொட்டுத் தண்ணீர்கூட வாயில் ஊற்றமாட்டேன். அவர் உயிருடன் இருக்கிறார் என்று தான் எனக்குப் படுகிறது. பிறகு அங்குப் போகவேண்டிய அவசியமில்லை என்கிறாயே, அது என்ன?" என்றாள்.

விமலா சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "உண்மையாகவே அந்த வீட்டில் இனி உனக்கு இடம் இல்லை. இனி உனக்கு இங்கு எப்படியோ அப்படியே தான் தாயார் வீட்டிலும். அந்த வீட்டில் நீ இருக்க முடியாது!" என்றாள்.

இந்து கண்ணீரை அடக்கிக்கொண்டு, "இனி

என்னல் பொறுக்க முடியாது. நடந்த விஷயத்தைச் சொல்லு. கலியாணம் செய்து கொண்டாரா ?'' என்றாள்.

“ நீ அப்படி நினைக்கிறாயா ? ''

“ இல்லை. ஒருகாலும் நினைக்கவில்லை. எனது குற்றம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அவர் ஒருபோதும் அவ்வளவு பெரிய அநியாயத்தைச் செய்ய மாட்டார். எனக்கு ஏன் அவரிடத்தில் இடம் கிடையாது என்பதைச் சொல்ல மாட்டாயா ? '' என்று சொல்லச் சொல்ல இந்துவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

விமலாவும் கண் கலங்கினள். ஆனல் கண்ணீர் விடவில்லை. “ உனக்கு அங்கு இனி இடம் கிடையாது என்பதை எப்படி உணர்த்துவது என்றே எனக்குப் புரியவில்லை. ஷம்பு பாபு, அண்ணவைக் கைது செய்து விட்டார் '' என்றாள்.

இந்து நடுநடுங்கினள். “ அப்புறம் ? ''

விமலா சொல்லத் தொடங்கினள். “ நாங்கள் அப்போது காசியிலிருந்தோம். ஷம்பு பாபு பணம் கட்டுவதற்கு இரண்டு நாள் தவணை கொடுத்திருந்தார். ஆனல் நாலாயிரம் ரூபாய் சேரவில்லை. கைது ஆனதிற்கப்புறம் அண்ண போலா என்பவனை என்னிடம் அனுப்பினர். ஆனல் நாங்கள் அப்போது அலகாபாத்திற்குச் சென்று விட்டோம். அவன் திரும்பிப் போய் அதற்கப்புறம் வந்தான். இவ்விதம் ஒரு பத்து நாள் தாமதமாகி விட்டது. அதற்கப்புறம் நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம். எங்களிடமும் அத்தனை ரூபாய் ரொக்கமாக இல்லை. எனது வைரத்தை அடமானம் வைத்து, பத்துப்

பதினைந்து நாள் எங்கெல்லாமோ அலைந்து கடைசியாக அண்ணாவை விடுவித்துக் கொண்டு வந்தோம். உன்னிடம் நாலைந்து ஆயிரம் ரூபாய் பெறுமான மூள்ள வைரம் இருந்ததே! உனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தால்கூட இவ்வள வெல்லாம் நேர்ந்திருக்காது. அண்ணா, "இன்னும் பத்து நாளைக்கு ஜெயிலில் இருந்தாலும் பரவாயில்லை. அவளிடம் மட்டும் பணம் கேட்கக்கூடாது" என்று சொல்லி விட்டான். இப்போது அவனிடம் சென்று என்ன செய்யப் போகிறாய்? உன்னால் அவன் எவ்வளவோ சுகம் அடைந்து விட்டான்! இனியாவது அவனை உயிரோடு விட்டுவிடு. அதுதான் உனக்கும் நல்லது அவனுக்கும் நல்லது" என்றாள்.

இந்து சிறிதுநேரம் தலையைக் குனிந்து உட்கார்ந்துகொண் டிருந்தாள். பிறகு ஒவ்வொன்றாகத் தான் அணிந்திருந்த அத்தனை நகைகளையும் கழற்றி விமலாவின் காலடியில் வைத்துவிட்டு, "இவைகளைக்கொண்டு நீ உனது நகைகளை மீட்டுக்கொள், மன்னி! நான் அவரிடம் போகிறேன். இனி எனக்கு அவரிடத்தில் இடம் கிடைக்காது என்று நீ சொல்கிறாய். ஆனால் இனிமேல் தான் எனக்கு அவரிடத்தில் உண்மையான இடம் கிடைக்கும் என்று நான் சொல்கிறேன். எது இத்தனை நாளாக என்னை அவரிடமிருந்து பிரித்து வைத்திருந்ததோ அதை இன்று உனது காலடியில் வீசி எறிந்து விட்டு எனது சொந்த இடத்தை அடையப் போகிறேன். நாளைக்கு ஒரு தடவை வந்து உனது அண்ணாவையும், மன்னியையும் பார்த்துவிட்டுப்போ. இப்போது நான் போகிறேன்" என்று கூறிவிட்டு

வண்டியை எதிர்பார்க்காமலேயே இந்து வெளிக் கிளம்பினாள்.

“அடடே! போலா, நீயாவது கூடப்போய் வா அப்பா” என்று சொல்லி விமலா கண்ணீரைத் துடைத்துக்கொண்டே எழுந்து வந்து வெளிக் கதவருகில் நின்றாள்.

கையது அவன் கடலுள்ச்

சங்கமால்; பூண்பதுவும்

செய்யசங்(கு) ஈன்ற

செழுமுத்தால்;

★

ஆபரணங்களை அணிந்து பெண்கள் மனம் மகிழ்வார்கள். அணிகள் என்றால் அவர்களுக்கு அத்தனை ஆவல்!

★

அன்புக்கும் ஆசைக்கும், இன்பத்துக்கும் மட்டுமா பொன் அணிகள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன? P. A. R. தங்க மாளிகை ஒரு தங்கக் காவியமேதான்! பூர்ண திருப்தி உங்களுக்கு அங்கு, பரிபூரணமாக உண்டு!

Cover Printed at P. A. S. Press, Madras



மார்பி லணிவதற்கே—நல்ல
வைர மணிக ளுண்டு
பேர் பெற்றுவாழ்வதற்கே—பசும்
பொன்னணி யாவுமுண்டு
A.ராஜசெட்டியார் & பிரதர்
டைத்தெரு-கோயமுத்தூர்
போன் 218.A-தபால்பெட்டி 139-தந்தி "ராஜா"